AUGUST 28, 2020
FRIDAY
VOL: 006/083
RS. 10.00
LATE CITY★

Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk



நாட்டின் மறுமலர்ச்சிக்காக

# ‘கடனைக் குறைத்து முதலீட்டு ஊக்குவிப்பு’

**ரூ. 9 பில்லியனை அண்மித்த அனைத்துத் திட்டக் கடன்களையும் மீளாய்வு செய்யவும் தீர்மானம்**

**இடைக்காலக் குறை நிரப்பு மதிப்பீட்டை முன்வைத்து பிரதமர் உரை**

பா.நிரோஸ்

கொவிட் - 19 தொற்று காரணமாக வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, அரசாங்கம் மக்களுக்காக அறிமுகப்படுத்திய மீளுருவாக்க தொகுப்பின் மூலம், நாட்டின் தொழில்முனைவோர் மற்றும் உள்ளூர் தொழிலதிபர்கள், நாங்கள் எதிர்பாராத வகையில் பொருளாதாரத்தில் செயற்பட்டு நீடித்திருக்க முடிந்துள்ளது என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சி.வியின் உரையால் நேற்றும் சபையில் கடும் வாக்குவாதம்;

## ‘கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் உண்டு’

**நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென வலியுறுத்தல்**



பா.நிரோஸ்

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஷ்வரனின் சர்ச்சைக்குரிய நாடாளுமன்ற உரையை, ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டுமென, ஆளுங்கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்கள், நேற்றும் (27) சபாநாயகரிடம் வலியுறுத்தி, கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு, சி.வியை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

கிழக்கில் தேரர்கள் அடங்கிய செயலணி;

## ‘சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா?’



தமிழர்களுடைய வரலாறு, கலாசார அடையாளங்கள் என்பன அழிக்கப்பட்டு, எதிர்காலத்தில் பௌத்த சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா, தமிழர்கள் இல்லாத கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமையைப் பாதுகாக்கும் செயலணி அமைக்கப்பட்டுள்ளது என, நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி

## சிங்கராஜவுக்கு செல்லவுள்ளார்

மகேஸ்வரி விஜயனந்தன்

சிங்கராஜ வனம் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்தியுள்ளார் எனத் தெரிவித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஸ் பத்திரண, சிங்கராஜ வனப்பகுதிக்கு, விரைவில் தனிப்பட்ட கண்காணிப்பு விஜயமொன்றை ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

நீண்டகாலப் பயனை அனுபவிக்க

## ‘பொது மக்கள் காத்திருக்க வேண்டும்’

மகேஸ்வரி விஜயனந்தன்

நீண்டகாலப் பலனைப் பெறுவதற்காக, பொதுமக்கள் குறிப்பிட்ட காலத்தை அர்ப்பணிக்க வேண்டுமென, அரசாங்கம் தெரிவித்தது.



தொடர்ச்சி P2



## முகக்கவசம் இல்லாத பஸ் ஊழியர்களுக்கு அபராதம்

முகக்கவசம் அணியாமல் சேவையில் ஈடுபடும் அனைத்துத் தனியார் பஸ் ஊழியர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கும் வேலைத்திட்டமொன்று, செப்டெம்பர் முதலாம் திகதி முதல் அமல்படுத்தப்பட உள்ளதென, மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஓ.டபிள்யூ.பிரசந்த சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2



தனிமைப்படுத்தலை நிறைவு செய்த

## கர்ப்பிணிக்கு கொரோனா

தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துவிட்டு வீடு திரும்பிய நிலையில், தனது வீட்டில் சுயதனிமையில் இருந்த 24 வயதுடைய கர்ப்பிணி ஒருவர், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பாடசாலை மாணவர்களுக்கு

## பாலுக்குப் பதிலாக அரிசிக் கஞ்சி

நாட்டின் பால் உற்பத்தி போதுமானளவு இன்மை மற்றும் பாடசாலை மாணவர்களின் போசனை மட்டத்தை அதிகரிப்பதற்கு, பாலுக்குப் பதிலாக ஒரு கோப்பை அரிசிக் கஞ்சியை வழங்க, விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



ஒரே நாடு; ஒரே சட்டம் என்றால்

## ‘அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள்’



ஒரே நாடு ஒரே சட்டம் என்ற நடைமுறைதான் இந்த நாட்டில் பின்பற்றப்பட வேண்டுமாயின், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுங்கள் என்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதல்;

## பிள்ளையான் உட்பட 9 பேருக்கு அழைப்பு

ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் உட்பட 9 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

த.தே.கூ பேச்சாளர், கொறடா பதவி மாற்றம்;

## ‘சம்பந்தன் பின்வாங்கார்’

நிரோஷினி விஜயராஜ்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலும் கொறடா பதவியிலும் மாற்றத்தைக் கொண்டுவருவதில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பின்வாங்க மாட்டாரெனத் தெரிவித்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்,



தொடர்ச்சி P2

திருமண வயதெல்லையை,

## 18ஆக நிர்ணயிக்குமாறு பிரேரணை சமர்ப்பிப்பு

தற்போதைய நாடாளுமன்றத்தின் முதலாவது தனிநபர் பிரேரணையை, நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோன் சமர்பித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வரிச் சட்டங்கள் திருத்தம்

> **2020ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பொருளாதாரத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர எதிர்பார்க்கிறோம்**

பொருளாதார புத்துயிராக்கத்துக்கு, எளிய வரி முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்காக, வரிச் சட்டங்கள் பலவற்றைத் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென, அமைச்சரவை இணைப் பேச்சாளர்களுள் ஒருவரான, அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

போதைப்பொருள் வர்த்தகரின்

## ‘ரூ. 2,640 மில். கணக்குகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன’

போதைப்பொருள் வர்த்தகத்தால் சம்பாதிக்கப்பட்ட 2,640 மில்லியன் ரூபாய் வைப்பிலிடப்பட்டிருந்த 102 வங்கிக் கணக்குகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என,

தொடர்ச்சி P2

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror
பதிவு செய்வதற்கு



Dialog Type ACT TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+TAX
Mobitel Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘கடனைக் குறைத்து முதலீட்டு ஊக்குவிப்பு’

அத்துடன், கடனுக்கு பதிலாக முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு முக்கியமாக நடவடிக்கை எடுப்போம் என்றும் இந்தக் கொள்கை ஊடாக, அரசாங்கத்தின் செலவினங்களை குறைத்து பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இடைக்காலக் கணக்கறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், இந்த ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீதத்துக்கும் அதிகமான அளவைத் தாங்கிக் கொள்வதற்கு வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை 6.8 சதவீதமாக இருப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும், உண்மையில் இந்தச் செலுத்தப்படாத கட்டணங்களுடன் நோக்கும் போது, வரவு - செலவு திட்ட பற்றாக்குறை 9 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளது” என்றார்.

இவை அனைத்தினாலும், பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைந்துக் காணப்பட்டன. எமது நாட்டு மக்களுக்கு உள்ள ஆக்கபூர்வமான தொழில் முயற்சிகளின் மூலம் பயனடைவதற்கு தற்போதுள்ள பொருளாதார கட்டமைப்பில் இடமில்லை. இந்த நிலைமையை கடந்த ஆண்டுகளில் நாட்டில் இருந்த எந்தவொரு ஆட்சியாளரினாலும் புரிந்துகொள்ள முடியாது போனது.

“கொவிட் தொற்று பரவுவதற்கு முன்னதாகவே வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, பொருளாதாரத்தை புதுப்பிப்பதற்கான முயற்சி என்ற தொகுப்பு அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு, குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்குதல் மற்றும் அப்போதைய கடன்களை மறுசீரமைப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டது.

“ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் ஊடாக, பிரஜைகளின் அடிப்படை உரிமை, அதாவது பொருளாதார ரீதியில் பலமான பாதுகாப்பான நாட்டில் வாழ்வதற்கான விருப்பத்தை நிறைவேற்றி கொடுப்பதற்கு திறன் உள்ளது. இந்த பரந்த அபிலாஷையை அடைவதற்கு ஏற்ற வகையில், நாட்டின் உள்ளூர் பொருளாதாரம் குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னரே அமைச்சுகளின் நோக்கங்கள் தீர்மானிக்கப்பட்டன.

“2020 ஆம் ஆண்டுக்கான குறை நிரப்பு மதிப்பீட்டை சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2020 செப்டம்பர் முதல் டிசம்பர் வரையான 4 மாத காலத்துக்கான அரசாங்கத்தின் செலவுகளை ஈடுசெய்வதற்கு, ரூபாய் 1,900 பில்லியனை ஒதுக்கிக் கொள்வதற்கும் அதற்காக ரூபாய் 1,300 பில்லியன் கடன் வரம்பை அங்கிகரித்துக் கொள்வதற்கே, இந்த குறை நிரைப்பு மதிப்பீடு முன்வைக்கப்படுகிறது. 2020ஆம் ஆண்டுக்கான இந்தக் குறை நிரப்பு மதிப்பீடுகள் அனைத்தையும், ஒதுக்கீட்டுச் சட்டங்கள் மூலம் நாங்கள் முன்வைப்போம்.

2020ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களின் மொத்த அரச வருவாய் ரூபாய் 910 பில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. முதல் 8 மாதங்களில், அரச ஊழியர்களின் ஊதியத்துக்கா 521 ரூபாய் பில்லியன் செலவிடப்பட்டது. அதில், வட்டி செலுத்துவதற்கு 675 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டதுடன், அரச மானியங்கள் மற்றும் பிற வளாகங்களுக்கு, சுமார் 390 பில்லியன் ரூபாய் செலவாகின்றது. அதில், 2019ஆம் ஆண்டு முதல் செலுத்தப்படாத கட்டணங்களைச் செலுத்துவதற்கு, பாரிய தொகையை செலவிட வேண்டியுள்ளது. அதன்படி, அரசாங்கத்தின் செலவு ஒருவாறு நிர்வகிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதிக பொருளாதார வளர்ச்சி விகிதத்துடன் அரசாங்க வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இந்த நிலையில் ரூபாய் 9 பில்லியனை அண்மித்த அனைத்துத் திட்டக் கடன்களையும் மீளாய்வுச் செய்வதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதில் சில திட்டங்கள் உள்ளூர் ஒப்பந்தக்காரர்களினால் குறைந்த விலையில் நிறைவு செய்யக்கூடியவையாகும். சில திட்டங்களினால் உண்மையில் சமூக அல்லது பொருளாதார ரீதியில் எவ்வித நன்மைகளும் இல்லை. இதன் மூலம் திட்டங்களை செயற்படுத்துவதனை முழுமையாக நிறுத்துவது என்று பொருள்படாது.” என்றார்.

## ‘கருத்துச் சுதந்திரம்...

சி.வி.விக்னேஷ்வரனின் நாடாளுமன்ற உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு தான் கோரியிருந்ததாகவும் ஆனால், இதுவரையில் அந்த உரை ஹன்சாட்டிலிருந்து நீக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று (27) கூடிய நாடாளுமன்ற அமர்வில் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்றார்.

மேலும், எம்.பிக்கள் அனைவருக்கும் அவர்களது கருத்துகளை முன்வைப்பதற்கான உரிமை இருப்பதாகவும் கூறிய சபாநாயகர், சி.வியின் கருத்து அரசாங்கத்தின் கருத்தா அல்லது எதிர்க்கட்சியின் கருத்தா என்பதற்கு அப்பால், அவரின் கருத்தை அவர் முன்வைப்பதற்கான உரிமை இருக்கிறது என்றார்.

எனினும், சி.வியின் உரை நாட்டின் அரசமைப்பை மீறுவதாக இருப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சியினர் பலரும், சபையில் கூச்சலிட்டனர்.

இதன்போது, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, சி.வியின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறும் அரசமைப்புக்கு எதிராக இவ்வாறு முன்வைக்கப்பட்ட பல உரைகள் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, இந்த உரையையும் நீக்குமாறு அவர் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியினர், சி.வியின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டுமென கூச்சலிட்டுக் கொண்டிருந்த தருணத்தில், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளின்படி அவர்களது கருத்துக்களை முன்வைப்பதற்கான சுதந்திரம் இருப்பதாகவும், சி.வியின் உரை தொடர்பில் சபாநாயகர் எடுத்த முடிவு சரியானதெனவும் தெரிவித்தார்.

இந்த நாட்டின் பூர்விகக் குடிகள் தமிழர்கள் என்ற நிலைப்பாட்டிலா நீங்கள் இருக்கறீர்களென சபாநாயகரிடம் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கூச்சலிட்டனர். சி.வியை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றுங்கள் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

## ‘சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா?’

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற, இடைக்காலக் கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “12 பேர் அங்கம் வகிக்கும் அந்தச் செயலணியில், தமிழர் ஒருவர்கூட உள்வாங்கப்பட்டு இருக்கவில்லை. அதனையடுத்து, அதற்கு தமிழர் தரப்பில் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன், குறித்த செயலணியில் தமிழர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது” என்றார்.

“இந்த நிலையில், கடந்த பொதுத் தேர்தலின் பின்னர், அந்த செயலணியின் உறுப்பினர்களாக மேலும் நால்வர் உள்வாங்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களிலும் தமிழர்கள் ஒருவர்கூட உள்வாங்கப்படவில்லை. கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமையைப் பாதுகாக்கும் செயலணியில் தமிழர் ஒருவர்கூட ஏன் நியமிக்கப்பவில்லை என நான் ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகிறேன்.

“கிழக்கு மாகாணத்தின் மரபுரிமைகளைப் பாதுகாக்க, பௌத்த மதகுருமார் அடங்கிய செயலணி உருவாக்கப்பட்டது. தமிழர்களுடைய வரலாறு, கலாசார அடையாளங்கள் என்பன அழிக்கப்பட்டு, எதிர்காலத்தில் பௌத்த சிங்கள மயமாக்கலை ஏற்படுத்தவா என கேட்க விரும்புகிறேன்” என அவர் மேலும் தெரிவித்தார்.

## பாலுக்கு பதிலாக அரிசிக் கஞ்சி

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

தற்போதைய பாடசாலை மாணவர்களிடையே மந்தபோசனை, அதிபோசனை போன்ற போசனைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதனால் இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய் உள்ளிட்ட நோய்களின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக, விஷமற்ற பாரம்பரிய தேசிய அரிசி கஞ்சி ஒரு கோப்பையை மாணவர்களுக்கு வழங்குவது குறித்து அரச வைத்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த யோசனைக்கு, விவசாய அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இந்தத் திட்டம் தொடர்பில் ஆய்வு செய்யவும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, அமைச்சு தெரிவித்துள்ளது.

## ‘அரசியல் கைதிகளையும்...

நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர் கூறியதாவது,

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது கொள்கைப் பிரகடன உரையில் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அப்படியாயின், அக்கொள்கையின் கீழ், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட வேண்டும். சிலர், எவ்விதக் குற்றச்சாட்டுகளோ அல்லது விசாரணைகளோ இன்றி, தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த அரசாங்கம் புதிய அரசமைப்பை உருவாக்கினால், நாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டிய அவசியமே இருக்காது. மாகாண சபையின் ஊடாக எங்களது வேலைத்திட்டங்களைச் செய்யக்கூடியதாக இருக்கும். அந்தவகையில், அரசாங்கத்துக்கு ஆணித்தரமாக ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி, இந்த நாட்டுக்கு நிரந்தரமான தீர்வைத் தரவேண்டும்” எனத் தெரிவித்தார்.

## ‘பொது மக்கள் காத்திருக்க...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (27) இடம்பெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது, அரசாங்கத்தால் சில அத்தியாவசிமற்ற பொருள்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளால், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த போதே, அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், அந்தந்தச் சந்தர்ப்பங்களில் சில அர்ப்பணிப்புகளைச் செய்யாவிட்டால், இலக்கை அடைந்துகொள்ள முடியாது போகுமென்றார்.

“வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவை அமைக்க, அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது” எனவும் அவர் மேலும் கூறினார்.

## சிங்கராஜவுக்கு செல்லவுள்ளார்

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (27) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், பல விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வரும் சிங்கராஜ வனத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் லங்காகம - நெலுவ வீதியின் பணிகளால், வனத்தின் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றதா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றை வழங்குமாறு, சுற்றாடல் அமைச்சரிடம் ஜனாதிபதி அறிக்கை கோரியுள்ளார் என்று கூறினார்.

இந்த அறிக்கை கிடைக்கும் வரை, குறித்த வனப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு உள்ளதாகவும், அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

## பிள்ளையான் உட்பட 9 பேருக்கு...

பிள்ளையான், சுனில் ஹந்துன்நெத்தி, அகிலவிராஜ் காரியவசம், ஆசு மாரசிங்க, ரஞ்சித் மத்துமபண்டார, மங்கள சமரவீர, திலும் அமுனுகம, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஏ.எச்.எம். ஹலீம் ஆகியொருக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசத்தை, 31ஆம் திகதியும் ஆசு மரசிங்க மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரை, செப்டம்பர் 2ஆம் திகதியும், மங்கள சமரவீர மற்றும் சிவனேசதுரை சந்திரகாந்தன் எம்.பி ஆகியோரிடம், செப்டம்பர் 3ஆம் திகதி வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

## 18ஆக நிர்ணயிக்குமாறு பிரேரணை சமர்ப்பிப்பு

இந்த பிரேரணையை, நேற்று முன்தினம் (26), நாடாளுமன்ற செயலாளர் தம்மிக தசாநாயக்கவிடம் கையளித்தாக, பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

திருமணம் முடிப்பதற்கான வயதெல்லையை, 18ஆக நிர்ணயிப்பது இந்தப் பிரேரணையின் நோக்கம் என அவர் கூறினார்.

எந்த இனமானாலும், எல்லோருக்கும் பொதுவான சட்டம் என்ற வகையில் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தை வெகுவிரைவில் அமல்படுத்துவதற்கான அவசியம் உள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணிக்கு...

இவ்வாறு தொற்றுக்குள்ளானவர், சிலாபம் - ஆரச்சிகட்டுவ, பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என, சிலாபம் வைத்தியசாலையின் பணிப்பாளர் கபில பிரதீப் மல்லவாரச்சி தெரிவித்துள்ளார்.

சிலாபம் வைத்தியசாலையில், இந்தப் பெண்ணுக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட போதே, அவர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

டுபாயிலிருந்து ஜூலை 31ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்த இவர், வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டு, இந்த மாதம் 15ஆம் திகதியன்று வீட்டுக்குத் திரும்பி, சுயதனிமையில் இருந்துள்ளார்.

வவுனியா தனிமைப்படுத்தல் முகாமில் முன்னெடுத்த பிசிஆர் பரிசோதனையின் போது, இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அவர், ஐ.டீ.எச்.க்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அந்த வகையில், இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2,984ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘சம்பந்தன் பின்வாங்கார்’

இது தொடர்பில் அவர் பின்வாங்குவாரேயானால், அதில் சிக்கல் நிலைமை தோன்றலாமெனவும் கூறினார்.

டெலோ மற்றும் புளொட் ஆகிய பங்காளிக் கட்சிகளுக்கு தராமல், அந்தப் பதவிகள் மீளவும் சுமந்திரனுக்கும் ஸ்ரீதரனுக்கும் வழங்கப்படுமாக இருந்தால், இவ்விரு கட்சிகளும், நாடாளுமன்றத்தில் தனித்து இயங்கவோ அல்லது விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் அணிகளுடன் இணையவோ வாய்ப்புள்ளதாக வெ ளியான செய்தி தொடர்பில், நேற்று (27) வினவிய போதே, புளொட் தலைவர் த. சித்தார்த்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அடுத்தமுறை கூடவுள்ள நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது, இரா. சம்பந்தன் இது தொடர்பான முடிவை அறிவிப்பார். பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக சம்பந்தன் எடுத்த தீர்மானத்தில் இருந்து பின்வாங்கமாட்டாரென நம்புகிறோம். அவ்வாறு, அவர் பின்வாங்கினால், இந்த விவகாரத்தில் சிக்கல் நிலைமை தோற்றுவிக்கப்படலாம். எது எவ்வாறாயினும், அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாது” என்றும் அவர் மேலும் கூறினார்.

## வரிச் சட்டங்கள் திருத்தம்

நிதியமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கே, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (27) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பொருளாதாரத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர எதிர்பார்ப்பதுடன், இதற்கு அமைவாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களில் திருத்தம் செய்வதற்குத் தேவையான சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானி ஊடாக வெளியிடவும் இதனை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்காக இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதென அவர் தெரிவித்தார்.

அதற்கமைய, 2009 இலக்கம் 9 நாட்டை கட்டியெழுப்பும் வரிச் சட்டம், 2006ஆம் ஆண்டு இலக்கம் 13 பொருளாதார சேவை கட்டண சட்டம், 2011ஆம் ஆண்டு இலக்கம் 18 துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி சட்டம், 2018ஆம் ஆண்டு இலக்கம் 35 நிதி சட்டம் அத்துடன் 2017 இலக்கம் 24 உள்ளூர் வருமான சட்டம் மற்றும் 2002 இலக்கம் 14 பெறுமதி சேர்க்கப்பட்டதன் அடிப்படையிலான சட்டம் என்பவற்றைத் திருத்தம் செய்வது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டு, நாடாளுமன்றத்தில் முன்வைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதென்றார்.

## முகக்கவசம் இல்லாத பஸ் ஊழியர்களுக்கு அபராதம்

அவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுமென்றும், அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் அதிகமாகக் காணப்பட்ட போது, பஸ் ஊழியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விதிமுறைகள், தற்போது பின்பற்றப்படுவதில்லை என்றும் அவற்றை மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்காக பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேல் மாகாணத்தில் 4,800 தனியார் பஸ்கள் இயங்குவதோ அவற்றில், 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர் என்றும், அவர் கூறினார்.

## ‘ரூ. 2,640 மில். கணக்குகள்...

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்த வங்கிக் கணக்குகள் தொடர்பில், நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ள பொலிஸார், இந்த வங்கிக் கணக்குகளை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த வங்கிக் கணக்குகளுக்கிடையில் பாரியளவில் போதை வர்த்தகர்களும் இலங்கையிலிருந்து தப்பிச் சென்று வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள போதை வர்த்தகர்களின் கணக்குகளும் அடங்குவதாகத் தெரிவித்தார்.

போதை வர்த்தகம் தொடர்பில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள போதை வர்த்தகர்கள் மற்றும் அவர்களின் சகாக்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய, இந்த வங்கிக் கணக்குகள் குறித்து தெரியவந்துள்ளது என்றார்.

எனினும், இந்த வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# '19ஐ நீக்குவது உறுதி'



19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை என்பது, ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ள கருத்துக்கு முற்றிலும் பொய்யானது

யார் என்ன கூறினாலும், அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்காக தற்போதைய அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. எனவே, எத்தகைய தடை வரினும், 19 ஆவது திருத்தத்தை நீக்குவது உறுதியென, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை என்பது, ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ள கருத்துக்கு முற்றிலும் பொய்யானது என்றுத் தெரிவித்த அவர், உண்மைக்குப் புறம்பான கருத்துகளால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு வருகைதர வேண்டியிருப்பின் அதற்கு இடமளிக்க ஆளும் தரப்பு எம்.பிக்கள் விருப்பத்துடன் உள்ளனர் என்றார்.

கொழும்பில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்குவதற்காகவே, கடந்த பொதுத் தேர்தலில், மக்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கோரியதாகத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாட்டு மக்கள் ஜனாதிபதி மீதும் பிரதமர் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவ்வாறு மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை நாம் உறுதிசெய்ய வேண்டும் என்றார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்காக, 19 ஆவது திருத்தத்தை கொண்டுவரவில்லை என்று குற்றஞ்சாட்டிய அமைச்சர், ராஜபக்ஷர்களை பழிவாங்கவே இதனைச் செய்தனர். அதுமட்டுமல்லாது, மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதியாக தெரிவாவதை தடுக்கும் வகையில் 19 ஆவது திருத்தத்தில் சரத்துகளை உள்ளடக்கியதுடன், கோட்டாபய ஜனாபதிபதியாவதை தடுப்பதற்காக இரட்டைப் பிரஜாவுரிமை பிரச்சினையை எழுப்பினர். அவ்வாறே நாமல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடும் என்ற அச்சத்திலேயே, வயதெல்லையை 35 ஆக அதிகரித்து, 19 ஆவது திருத்தத்தை மேற்கொண்டனர். இவ்வாறு ராஜபக்ஷ தரப்பினர் நாட்டின் ஜனாதிபதியாவதை தடுக்கவே, கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட என்றார்.

## அங்கொட லொக்காவின் மற்றுமொரு சகா கைது

அங்கொட லொக்காவின் சகா ஒருவர், மூன்று கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி போதைப்பொருளை, வான் ஒன்றில் கொண்டுசென்றபோது, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர், கொழும்பு ஒருகொடவத்தை பகுதியில் வைத்து, நேற்று (27) அவரை கைதுசெய்துள்ளனர்.

வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் தற்போது வத்தளை பகுதியில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 3 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வானில் இருந்து ஆறு இலட்சத்து 11,550 ரூபாய் பணமும் இரண்டு காசோலைகளையும் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.


### பெண் ஒருவர் தேவை

தேகாரோக்கியமான தாய் ஒருவரை பராமரிக்க 45-55 வயதுக்கு இடைப்பட்ட, உறவுகள் எவரும் இன்றி, எவ்வித பொறுப்புகளுமற்ற விருப்பத்துடன் பணியாற்றகூடிய, பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு: நுகேகொட சம்பத்-076-6075702

### விற்பனைக்கு...

டொயடா voxy ஐபிரைட் 2014 இல் உற்பத்தி செய்யப்பட்ட CAG-78XX KM 68000 பயணித்த சொகுசு வான் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு- தாய்யோ என்ரபிரைஸல் தனியார் நிறுவனம், இலக்கம் 83, காலி வீதி, கல்கிசை.

071-4468444


## 'அரசமைப்பை முழுமையாக திருத்த வேண்டும்'



அரசமைப்புத் திருத்தத்தை பகுதி பகுதியாக மேற்கொள்ளாமல், முழுமையாகத் திருத்துமாறு எல்லே குணவங்ச தேரர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கெவிந்து குமாரதுங்க மற்றும் அனுப பெஸ்குவல் ஆகியோர், நேற்றுமுன்தினம்(26) கொழும்பில் எல்லே குணவங்ச தேரரை சந்தித்தபோதே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் கருத்துரைத்துள்ள அவர், ' பூரண அரசமைப்பொன்றை நாம் உருவாக்க வேண்டும். அதில் பிரச்சினை இல்லை. சில சரத்துகள் உள்ளன. அவற்றை முழுமையாக மாற்ற வேண்டும். 83 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சியில் கலவரம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், 'ஒற்றை' என்ற சொற்பதத்தை அரசமைப்புக்குள் நானே உள்ளடக்கினேன்'.

ஆனால், அதுவும் வலுவானதல்ல என்பதை தற்போது உணர்கின்றேன். ஆகவே, மரத்தின் கிளைகளைப் பாதுகாக்காமல் மரத்தின் வேரைப் பாதுகாப்பதற்குத் திடச்சங்கற்பம் பூண வேண்டும் என, உங்கள் இருவருக்கும் கூற விரும்புகிறேன். வேர் பாதுகாக்கப்பட்டால் கிளைகளும் பாதுகாப்பாக இருக்குமென, எல்லே குணவங்ச தேரர் கூறியுள்ளார்.

மேலும், "சிங்கள பௌத்த வாக்குகளால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் தேரர்களும் சிங்கள பௌத்த மக்களும் என, நாட்டின் தலைவர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார். அது வரவேற்கத்தக்கது. 48 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அரச தலைவர் ஒருவர் முதற்தடவையாக இவ்வாறு கூறியுள்ளார் எனவும் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

## யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக, விஞ்ஞான பீடம், தொழிநுட்ப பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சற்குணராஜா, நேற்று (27) நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியன்று, துணைவேந்தராக இருந்த பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டிருந்தைத் தொடர்ந்து, புதிய துணைவேந்தரை தெரிவு செய்யும் வரை பேராசிரியர் க.கந்தசாமி தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், இந்த வெற்றிடத்துக்காக ஆறு பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், மத்திய மதிப்பீட்டுக் குழு மற்றும் பேரவையின் மதிப்பீடுகளின் அடிப்படையில் மூன்று பேர் ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.

இதில் முதலாவதாக, விஞ்ஞான பீடம், தொழிநுட்ப பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சற்குணராஜாவும் இரண்டாவதாக, உயர்பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தனும் மூன்றாவதாக, வணிக முகாமைத்துவ முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பியும் பரிந்துரைக்கப்பட்டனர்.



இந்நிலையில் இவர்களில், எஸ். சற்குணராஜா, நேற்று (27) ஜனாதிபதியால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக கடிதம், நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவர், இன்று (28) காலை 9 மணிக்கு, யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து பதவியேற்கவுள்ளார்.

## கிராமிய குளங்களை புனரமைக்க தீர்மானம்

கிராமிய குளங்களைப் புனரமைக்க விசேட செயலணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினரைக்கொண்டு மேற்படி செயலணியை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நிறுவன பிரதானிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, அமைச்சர் சமல் ராஜபக்ஷ



இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

நாட்டில் 14,000 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில், ஒரு கிராமத்துக்கு ஒரு குளம் என்ற அடிப்படையில், தெரிவுசெய்யப்பட்ட குளங்களைப் புனரமைக்க எதிர்பார்த்துள்ளதாக, அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஆவணக் கண்காட்சி

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 107ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில், ஆவணக் கண்காட்சி, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பி.ப 2 மணிவரை நடைபெறவுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை காரியாலயத்தின் பிரதான மண்டபத்தில், கண்காட்சி நடைபெறவுள்ளது.




## கொம்பனித்தெரு பகுதியில் மேம்பாலம் அமைக்க தீர்மானம்

கொழும்பு- கொம்பனித்தெரு பிரதேசத்தில் நிலவும் கடும் வாகன நெரிசலுக்குத் தீர்வுக்காணும் வகையில், அப்பகுதியில் மூன்று மேம்பாலங்களை நிர்மாணிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொம்பனித் தெரு பிரதேசத்தில் உத்தராநந்த மாவத்தை மற்றும் நீதிபதி அக்பார் மாவத்தை ஊடாக ரயில் பாதை அமைந்துள்ளதால், அலுவலக நேரங்களில் கடும் வாகன நெரிசல் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக மேம்பாலத்தை நிர்மாணித்து ஒரு திசையில் வாகனங்கள் செல்லும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இதன் கீழ், 03 மேம்பாலங்களை நிர்மாணிப்பதற்கும் பொருத்தமான தகுதியைப் பெறும் உள்ளூர்



ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, கேள்வி மனுக்களைக் கோருவதற்காகப் பெருந்தெருக்கள் அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

வரலாற்றைத் திரிபுபடுத்துவோரே

# ‘கூச்சலிட்டு வருகின்றனர்’

■ க.அகரன், நடராசா கிருஸ்ணகுமார், எஸ். நிதர்ஷன்

வரலாற்றைத் திரிபுபடுத்தி, இலங்கையைச் சிங்கள, பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பயணிக்கின்ற பேரினவாதிகள், விக்னேஸ்வரனின் கூற்றை ஜீரணிக்க முடியாது, கூச்சலிட்டு வருகின்றனரென்று, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், அவர், நேற்று (27) விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தேர்தல் நிறைவடைந்தவுடன் தமிழ்த் தேசிய கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமென்று கோரி நின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, உண்மை வரலாற்றுக்கு எதிராக கோசங்கள் எழுந்தபோது மௌனித்து நிற்கின்றதெனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



9ஆவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப நாளன்று சபாநாயகருக்கான கட்சித் தலைவர்கள் வாழ்த்துரையின்போது, தமிழ் மக்கள் பூர்விகக் குடிகள்; தமிழ் மொழிதொன்மையானது என்ற உண்மையை, நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரன் வெளிப்படுத்தி உள்ளாரெனவும், சிவசக்தி குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களை வந்தேறு குடிகளாகச் சித்திரித்து, இலங்கையை முழுமையான சிங்கள, பௌத்த நாடாகப் பிரகடனப்படுத்துவதே, பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலாக இருக்கின்றதெனத் தெரிவித்துள்ள அவர், அதன் ஓர் அங்கமாகவே, கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஜனாதிபதி செயலணி அதற்கு முழுமையான ஆதாரமாக அமைகின்றதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழினத்தின் அடையாளங்களை அழித்து, பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தி பௌத்த, சிங்கள சித்தாந்தத்தை நிறுவுவதற்கு விளைந்து வருகின்ற ஆட்சியாளர்களுக்கு தமிழர்களும் தமிழும், பூர்வீகமும் தொன்மையும் கொண்டது என்ற உண்மையைக் கூறுகின்றபோது, அது கசக்கவே செய்யுமெனவும், அதன் வெளிப்பாடாகவே தென்னிலங்கையில் விக்னேஸ்வரனுக்கு எதிரான கூச்சல்கள் அதிகரித்துள்ளன எனவும், அவர் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலை கீத இறுவட்டு வெளியீட்டு விழா

■ என். ஜெயரட்ணம்

இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள அகலவத்தை, டார்டன்பீல்ட் தோட்ட கணபதி அறநெறிப் பாடசாலையின், பாடசாலை கீத இறுவட்டு வெளியீடு விழா இம்மாதம் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு, தோட்ட முத்துமாரியம்மன் கோவில் மண்டபத்தில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், அறநெறிப் பாடசாலை மாணவ-மாணவிகளின் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பறைசாற்றும் விதத்திலான கலை, கலாசார நிகழ்ச்சிகளும் களுத்துறை மாவட்டத்தில் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய ஆசிரிய-ஆசிரியைகள், பிரதேச தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு வகைகளிலும் அயராது பணியாற்றிவரும் தன்னார்வலர்கள், நலன்விரும்பிகளும் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அகலவத்தை கணபதி அறநெறிப் பாடசாலை விழா ஏற்பாட்டுக் குழுவின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரபல அரசியல்வாதிகள், பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.





நிந்தவூர் பிரதேச சபையின்

## உறுப்பினர்கள் மூவர் இராஜினாமா

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை, நிந்தவூர் பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூன்று உறுப்பினர்கள், தமது உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளனரென, தவிசாளர் எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர், நேற்று (27) தெரிவித்தார்.

கட்சியினதும் நிந்தவூர் மத்திய குழுவினதும் தீர்மானத்துக்கமைவாக, முன்மாதிரியான முறையில், கட்சியின் ஏனைய வேட்பாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், தமது பதவியை அவர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்களான எம்.எல்.ஏ. மஜீத், எம்.எம்.சம்சுதீன், ஏ.றிபானா ஆகிய மூவருமே, செவ்வாய்க்கிழமை (25) நடைபெற்ற சபை அமர்வில் தமது இராஜினாமா தொடர்பாக அறிவித்தனர் என, தவிசாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் கட்சியின் வளர்ச்சிக்காகவும் மக்கள் பணிக்காகவும் தங்களை அர்ப்பணித்துச் செயற்படவிருப்பதாகத் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் பெண் உறுப்பினர் ஒருவர் கட்சியினதும் மத்திய குழுவினரும் தீர்மானத்துக்கமைய ஏனைய வேட்பாளர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி முன்மாதிரியாக இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணதாசனை ஆஜர்படுத்துமாறு உத்தரவு



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிய கண்ணதாசன் மீதான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு வழக்கை, செப்டெம்பர் 7ஆம் திகதி வரை ஒத்திவைத்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், அன்றைய தினம் அவரை மன்றில் ஆஜர்படுத்துமாறு, வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மிருதங்க கலைஞர்களில் ஒருவரான கண்ணதாசன், தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்து, போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்து, மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார்.

**“ யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மிருதங்க கலைஞர்களில் ஒருவரான கண்ணதாசன், தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்து, போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்து, மறுவாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார்**

இந்நிலையில், கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில், மஞ்சுளா விஜயபாலன் எனும் சிறுமியைக் கட்டாயமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்த்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட கண்ணதாசனுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஜூலை 22ஆம் திகதி அவரது ஆயுள் தண்டனையை இரத்துச் செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுக்க அனுமதியளித்திருந்தது.

இந்த நிலையில், அவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை மீள விளக்கத்துக்கு எடுப்பதற்கு வவுனியா மேல் நீதிமன்றில் மீளவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் (26) வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, கண்ணதாசன், தொடர்ந்து வெலிக்கடைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அவரை வரும் 7ஆம் திகதியன்று மன்றில் முற்படுத்துமாறு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு உத்தரவிட்ட வவுனியா மேல் நீதிமன்றம், அன்றைய தினம் வரை வழக்கை ஒத்திவைத்தது.

வீதி திருத்தும் பணியில் ஈடுபட்ட

## தொழிலாளர் மீது தாக்குதல்

■ க. அகரன்

வவுனியா - நெடுங்கேணி, ஒலுமடு பகுதியிலுள்ள வீதியைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிக்கொண்டிருந்த தொழிலாளர் ஒருவர், தாக்குதலுக்கு இலக்கான நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெடுங்கேணி - பெரியமடு பகுதியைச் சேர்ந்த குகமூர்த்தி துசிந்தன் (வயது 34) என்பவரே, இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

இந்தச் சம்பவம், நெடுங்கேணியில், நேற்று முன்தினம் (26) இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த ஊழியர், நேற்று முன்தினம் (26) மாலை 6.45 மணியளவில், வீதி திருத்தும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, அவ்வழியே வந்த ஓட்டோ ஒன்றை வழிமறித்து ஒரு வழிப்பயணமாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இதன்போது, ஓட்டோ சாரதி ஒருவர் குறித்த ஊழியரின் கருத்தை உள்வாங்காமல், ஓட்டோவைச் செலுத்தியதால், இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதையடுத்து, ஓட்டோ சாரதி, அலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, நெடுங்கேணி சந்தியிலிருந்த தனது நண்பர்களை அழைத்து, குறித்த ஊழியர் மீது கடுமையாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



நாகர்கோவில் கடற்பரப்பில்

## புத்தளம் மீனவர்களின் படகுகள் மீட்பு

■ எம். றொசாந்த்

நாகர்கோவில் கடற்பரப்பில் இருந்து, நேற்று முன்தினம் (26) இரவு, சட்டவிரோதக் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்களின் 3 படகுகள் உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் அதிகாரிகளால் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட படகுகள், புத்தளம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுடையதெனவும் அவர்கள், தொழில் ஈடுபட்டவர்கள் படகுகளைக் கைவிட்டுத் தப்பித்துள்ளனரெனவும் கூறினார்.

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சட்டத்துக்குப் புறம்பாக, மீனவர்கள் தொழில் ஈடுபட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் (26) இரவு, நாகர்கோவில் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி, புத்தளத்தைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டனர்.

இவ்வாறு தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் கரையேறிய போது, அங்கு கூடிய உள்ளூர் மீனவர்கள் அந்தப் படகுகளை அதிகாரிகளின் உதவியுடன் தடுக்க முயன்றனர். இதன்போது, படகுகளில் இருந்த மீனவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது, 3 படகுகளும் தடை செய்யப்பட்ட சுருக்கு வலை ஒன்றும் மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருள்கள், நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## யாழ். திரைப்படக் கல்லூரியின் அங்குரார்ப்பண வைபவம்



யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண திரைப்படக் கல்லூரியின் அங்குரார்ப்பண வைபவம், அதன் நிறைவேற்று இயக்குநரான சு.சுதர்சன் தலைமையில், இம்மாதம் 23ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் என். சண்முகலிங்கன் ஆகியோர் இக்கல்லூரியைத் திறந்து வைத்ததோடு, மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் மட்டுமல்லாது அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக, யாழ்ப்பாண திரைப்படக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதோடு, இளைஞர்களுக்கு வருங்காலங்களில் நல்லதொரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கிலும் செயற்படுகின்றது.

பிறப்பு, இறப்பு பதிவுகளை உடனுக்குடன் பெற

## விசேட கருமபீடம் திறந்துவைப்பு

■ எம்.எஸ்.எம். நூர்தீன்



மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவால் வழங்கப்படுகின்ற பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகளைத் தாமதமின்றி உடனுக்குடன் வழங்குவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட புதிய கருமபீடத்தை, மாவட்டச் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, பிரதேச செயலகத்தில், நேற்று முன்தினம் (26) திறந்துவைத்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரசவிக்கின்ற மற்றும் மரணமடைகின்றவர்களின் பிறப்பு, இறப்புப் பதிவுகள், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திலேயே பதிவு செய்யப்படுகின்றன.

இம்மாவட்டத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மாதாந்தம் பிரசவிக்கின்ற சுமார் 600 தொடக்கம் 1,000 வரையான குழந்தைகளின் பிறப்பு பதிவுகள் இச்செயலகத்திலேயே ஆவணப்படுத்தப்படுகின்றன.

ஒரே நேரத்தில் அதிக விண்ணப்பங்கள், கிடைப்பதால் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் குறைத்து, உடனுக்குடன் பதிவுகளை வழங்கவதற்கு ஏற்றவகையில், இவ்விசேட கருமபீடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## யான் ஓயா நீர்த்தேக்கத்தில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு

■ ஏ.ஆர்.எம். றிபாஸ்

தேசிய நன்னீர் மீன்வளர்ப்பு, அபிவிருத்தி அதிகாரசபையால், யான் ஓயா நீர்த்தேக்கத்தில் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கான செயன்முறை, நேற்று (27) முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை மத்திய காரியாலயத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் செயன்முறையில், முதல் அங்கமாக 75,000 மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டன.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக முன்னெடுக்கப்படும் இச்செயன்முறையில், குளங்களைப் புனரமைத்தல், பராமரித்தல், மீன் வளங்களைப் பெருக்குதல், பராமரித்தல் போன்ற செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கடும் வரட்சியால் அம்பாறையில் 59,803 பேர் பாதிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கடும் வரட்சி காரணமாக, அம்பாறை மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 17,212 குடும்பங்களைச் சேர்ந்த 59,803 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, , அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ், நேற்று (27) தெரிவித்தார்.



பதியத்தலாவ பிரதேச செயலாளர் பிரிவில் 21,623 பேரும் மகாஓயா பிரிவில் 6,647 பேரும், உகன பிரிவில் 357 பேரும், பொத்துவில் பிரிவில் 9,928 பேரும், திருக்கோவில் பிரிவில் 1,786 நபர்களும் அம்பாறை பிரிவில் 356 பேரும் நாவிதன்வெளி பிரிவில் 8,329 பேரும், ஆலையடிவேம்பு பிரிவில் 3,644 பேரும், அக்கரைப்பற்று பிரிவில் 204 பேரும், தமன பிரிவில் 2,276 பேரும் லகுகல பிரிவில் 1,467 பேரும், அட்டாளைச்சேனை பிரிவில் 3,186 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார். இவ்வாறு வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும் அம்பாறை மாவட்டச் செயலாளர் டீ.எம்.எல். பண்டாரநாயக்கவின் ஆலோசனைக்கமைய, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

# நூலகங்களைத் திறக்கத் தீர்மானம்

■ அஸ்லம் எஸ். மௌலானா

கொவிட்-19 அச்சம் காரணமாக, கல்முனை மாநகர பிரதேசங்களில் மூடப்பட்டிருக்கின்ற அனைத்து நூலகங்களையும் மக்கள் பாவனைக்காகத் திறந்து, இயங்கச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச்சபை அமர்வு, மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில், நேற்று முன்தினம் (26) நடைபெற்றபோதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கொரோனா வைரஸ் அச்சத்தால், பொதுமக்கள் ஒன்றிணைவதைத் தடுக்கும் பொருட்டு, மார்ச் மாதம் பிற்பகுதியில் அரசாங்கம் நடைமுறைப்படுத்திய ஊரடங்கு சட்டம், கட்டுப்பாடுகள் காரணமாக பொது நூலகங்களும் மூடப்பட்டன.

தற்போது நாடு இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்ற நிலையில், வாசகர்களினதும் மாணவர்களினதும் நலன்கருதி, கல்முனையிலுள்ள அனைத்து நூலகங்களும் திறக்கப்பட வேண்டுமென, மாநகர சபையின் பொது வசதிகள் குழு பரிந்துரை செய்திருந்தது.

இப்பரிந்துரை, நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுச் சபை அமர்வில் பரிசீலிக்கப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

இதன்பிரகாரம், கல்முனை மாநகர சபையின் கீழுள்ள அனைத்துப் பொது நூலகங்களையும் வாசிகசாலைகளையும் கூடிய விரைவில் திறந்து, சுகாதார நடைமுறைகளுடன் இயங்கச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென, மாநகர மேயர் ஏ.எம்.றகீப் இதன்போது அறிவித்தார்.



பா.நிரோஸ்



கோப், சோபா குழுக்களின் தலைவர் பதவிகளை

# ‘எதிர்க் கட்சிக்கு வழுங்குவது நாடாளுமன்ற சம்பிரதாயமல்ல’

கோப், சோபா குழுக்களின் தலைவர் பதவிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவதென்பது நாடாளுமன்ற சம்பிரதாயம் இல்லை எனத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அக்குழுக்களின் தலைவர் பதவிகள், ஆளுங்கட்சியினருக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

நேற்றைய நாடாளுமன்றத்தில், மேற்குறித்த குழுக்களின் தலைவர் பதவிகள் எதிர்க்கட்சியினருக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் இதுவே நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் எனவும், இது தொடர்பில் பிரதமர் தெளிவான பதில் ஒன்றை வழங்க வேண்டுமெனவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தங்களது அரசாங்கத்தின் காலப் பகுதியில், கோப், சோபா குழுக்களின் தலைவர் பதவிகள், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே வழங்கப்பட்டதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இது நாடாளுமன்ற சம்பிரதாயம் என்றும், இதனை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது, மேற்படி குழுக்களின் தலைவர் பதவிகளுக்கு, எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமா என, பிரதமரிடம் சபாநாயகர் வினவினார்.

கோப், சோபா குழுக்களின் தலைவர்களாக, எதிர்க்கட்சி உறுப்பினர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவே, நாடாளுமன்ற சம்பிரதாயமாக இருக்கிறது. எனவே, இம்முறையும் கோப், சோபா குழுக்களின் தலைவர்களாக எதிர்க்கட்சி உறுப்பினர்களையே நியமிக்க வேண்டுமென, எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவும் தெரிவித்தார்.

புத்திசாலித்தனமற்ற அரசாங்கத்தின் வரிக்கொள்கையால்

# ‘பொருளாதாரம் வங்குரோத்தாகியுள்ளது’

ஏப்ரல் 30ஆம் திகதிக்கும் செப்டெம்பர் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட அரச செலவீனங்கள் தொடர்பான தெளிவான அறிக்கையொன்றை, அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனத் தெரிவித்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, புதிய அரசாங்கத்தின் வரிக் கொள்கையால், நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்தடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (27) நடைபெற்ற இடைக்காலக் கணக்கறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், “வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாத வருடமாக இந்த வருடம் உள்ளது. 2015ஆம் ஆண்டு எங்களது அரசாங்கத்தின் காலப் பகுதியில், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பன நடந்திருந்தாலும், வரவு - செலவுத் திட்டத்தை நாம் அப்போது சமர்ப்பித்திருந்தோம்” என்றார்.

“சட்டங்களை இயற்றல் மற்றும் நிதி தொடர்பான அதிகாரங்கள், நாடாளுமன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளன. ஆனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த வேளையில், நிதி அமைச்சு இடைக்காலக் கணக்கறிக்கை ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. நிதி அமைச்சுக்கு அந்த அதிகாரங்கள் இல்லை.

“ஏப்ரல் 30ஆம் திகதி முதல் செம்டெம்பர் மாதத்துக்கான அரசாங்கச் செலவீனங்கள் தொடர்பான தகவல்கள், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் புத்திசாலித்தனமற்ற வரிக் கொள்கையால், நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்தடைந்துள்ளது.

“இவ்வாண்டு ஏப்ரல் 30ஆம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 1ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான அரச செலவீனங்கள் தொடர்பில், நாடாளுமன்றத்துக்குப் பிரதமர் தெளிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

“நாட்டின் பொருளாதாரம், ஒரு கசப்பான நெருக்கடியைச் சந்தித்துள்ளது. நாட்டின் மொத்த வருமானத்தையும், இவ்வாண்டில் செலுத்த வேண்டிய கடனுக்காகச் செலுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

“இந்த நெருக்கடி நிலைமைக்கு, கொரோனா வைரஸைக் காரணங்காட்ட முடியாது. அரசாங்கத்தின் வரிக் கொள்கையே இதற்குக் காரணம். எமது அரசாங்கத்தில், 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கையிருப்பாக வைத்திருந்தோம். ஆனால் இந்த அரசாங்கம், அதனைக் கடன் செலுத்துவதற்காகப் பயன்படுத்துகிறது” என்று, சம்பிக்க மேலும் கூறினார்.

மாகாண சபைகள்

# ‘நாட்டின் தேவைக்காக உருவாக்கப்படவில்லை’

சுதந்திரம் பெற்றதன் பின்னர், தமிழர்கள் ஐம்பதுக்கு ஐம்பதை கேட்டார்கள். அதனாலேயே, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இன்று வரையில் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனத் தெரிவித்த தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், நாட்டு மக்களுக்காக அப்போதே சிந்தித்திருந்தால், தீர்வு கிடைத்திருக்கும் எனவும் கூறினார்.

நாட்டில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டிருப்பது நாட்டின் தேவைக்காக அல்ல எனக் கூறிய அதாவுல்லாஹ், எமது சிறிய நாட்டை ஒன்பதாகப் பிரித்து வேடிக்கைப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (27) தொடர்ந்து உரையாற்றிய அவர், வெளிநாட்டுச் சக்திகளின் அழுத்தங்கள் இல்லாது, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்” என்றார்.

“நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், மக்களின் அபிலாசைகளைச் சுமந்து வரவில்லை. அப்படி வந்திருந்தால், மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வைத்திருக்கும் அரசாங்கம், மக்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும்” எனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

“திருகோணமலை மாவட்டத்தில் எங்களது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருக்காவிட்டால், நாம் ஓர் ஆசனத்தை வென்றிருப்போம். அதனூடாக நாம் ஒரு தேசிய பட்டியலையும் பெற்றிருபோம். நாட்டில் எல்லோரும் வாழ்வதற்கான அரசமைப்பு தொடர்பில் சிந்திக்க வேண்டும்” எனவும் அவர் இதன்போது கூறினார்.

அரசமைப்பு தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்க அரசாங்கத்துக்கு இடமளிக்க வேண்டுமெனவும் அதன் பின்னர், நமது நாட்டுக்கு என்ன தேவை என்பது தொடர்பில் பேச வேண்டுமெனவும், அதைவிடுத்து, யானை அடிப்பதற்கு முன்பாக தானே அடித்து வீழ்ந்துவிடக் எனவும் இதன்போது கூறினார்.

# ஜனசாக்களை எரிப்பதற்கு பைசல் காசிம் கண்டனம்

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனஸாக்களை எரிப்பதற்குக் கண்டனத்தைத் தெரிவித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், இந்த விடயத்தால் முஸ்லிம் மக்கள் பெரும் கவலையடைந்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர், “கோரோனா வைரஸால் நாட்டுக்கு ஏற்பட்டிருந்த பொருளாதார இழப்புகளைச் சரி செய்வதற்கு நீண்ட நாள்கள் செல்லும். நாங்கள் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே ஆட்சியைப் பிடிப்பதற்காகப் பேசுவதாக கூறினார்கள். ஆனால், நீங்கள் தந்தாலும் நாங்கள் அரசாங்கத்தை ஏற்கப் போவதில்லை” என்றார்.

“எங்களது மார்க்கத்தின் படி ஜனசாக்களை எரிக்க முடியாது. முஸ்லிம்கள் இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுபோன்ற காரணங்களாலேயே முஸ்லிம்கள் அரசாங்கத்திடமிருந்து சற்று விலகியிருக்கிறார்கள். 13, 19ஆவது திருத்தச் சட்டங்கள் தொடர்பில் அதிகம் பேசப்பட்டிருக்கிறது.

“19ஆவது திருத்ததை கடந்த அரசாங்கத்தில் நாம் கொண்டுவந்திருந்தோம். 19ஆவது திருத்தத்தால் சிறுபான்மை மக்களுக்கு எந்த பாதிப்புக்களும் இல்லை” எனவும் கூறினார்.

சுனில் ஹந்துநெத்தியை

# ‘விசாரணைக்கு அழைக்க முடியாது’

கோப் குழுவின் முன்னாள் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தியை, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு முன் ஆஜராகுமாறு, ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பு விடுத்திருப்பது தவறென, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, இவ்விடயம் தொடர்பில் உரையாற்றியிருந்த நிலையில், அதற்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய அநுரகுமார, “நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றும் உரைகள், செயற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு வெளியில் சாட்சியங்கள் வழங்கவோ அல்லது, விசாரணைக் குழுக்குட்படுத்தவோ முடியாதென, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது” என்றார்.

“சபாநாயகரின் அனுமிதியில்லாது, நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எதுவிதமான விசாரணைகளையும் மேற்கொள்ள முடியாது என்கிற நிலையில், அரசியல் பழிவாங்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு, அந்த ஆணைக்குழுவின் முன்பாக ஆஜராகுமாறு, கோப் குழுவின் முன்னாள் தலைவர் சுனில் ஹந்துநெத்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

“கோப் குழுவின் தலைவராக செயற்பட்டமை தொடர்பிலேயே, ஜனாதிபதி ஆணைக்குழு அவரை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்திருக்கிறது. மட்டக்களப்புத் தனியார் பல்கலைக்கழகம் தொடர்பில் கோப் குழு முன்னெடுத்த விசாரணைகள், அந்த நிறுவனம் தொடர்பில் சுனில் ஹந்துநெத்திக்கு தெரிந்த விடயங்கள் தொடர்பிலேயே விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது” எனவும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தின் அனுமதியில்லாது, ஜனாதிபதி ஆணைக்குழுவால் எந்தவொரு நபரையும் விசாரணைக்கு அழைக்க முடியாது. எனவே, இது தொடர்பில் உங்களின் கருத்து என்ன எனவும் இதன்போது சபாநாயகரிடம் அவர் வினவினார்.

அநுரகுமாரவின் கேள்விக்குப் பதிலளித்த சபாநாயகர், இந்த விசாரணைகள் தொடர்பில் தனக்கு அறிவிக்கவில்லை எனவும் இதுத் தொடர்பில் ஆராய்வதாகவும் கூறிய சபாநாயகர், இதுத் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதாகவும் கூறினார்.

அந்தப் பதில் கடிதம் எப்படியானதாக இருக்குமென அநுரவின் கேள்விக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படுமாக இருந்தால், அது தொடர்பில் அறிவிப்போம். கோப் குழுவால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் அக்குழுவின் தலைவரையோ அல்லது உறுப்பினர்களையோ ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு அழைக்க முடியுமா” எனவும் அநுர இதன்போது கேள்வி எழுப்பியமைக்கு, “இல்லை. அவ்வாறு அழைக்க முடியாது” என்றார்.

# ‘ஒரே நாடு; ஒரே சட்டம் எதனைக் குறிக்கிறது?’

நாட்டில் ஒரே சட்டம் அமல்படுத்தப்பட்டால், தற்போது அமுலில் உள்ள கண்டிச் சட்டம், தேச வழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம் என்பன இல்லாமல் ஆக்கப்படுமா என்கின்ற தெளிவை அரசாங்கம் வழங்க வேண்டுமெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப், ஒரே நாடு ஒரே சட்டம் எதனைக் குறிக்கிறதெனவும் கேள்வி எழுப்பினார்.

“பெரும் எதிர்ப்பார்ப்புடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் புதிய அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளனர். இதற்கு முன்னர் பண்டாரநாயக்க காலத்திலேயே இவ்வாறான பெரும்பான்மை வழங்கப்பட்டிருந்தது. அப்போதைய பெரும்பான்மை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சில விடயங்களில் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளையும் புதிய அரசாங்கம் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் செயற்பட வேண்டும்” என்றும் அவர் கூறினார்.

“இன்று ஒரே நாடு ஒரே சட்டம் என்ற தொனிப்பொருள், மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறது. ஒரே நாடு ஒரே சட்டம் என்ற தொனிப்பொருள் எதைக் குறிக்கிறது என்ற விடயம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. ஒவ்வொரு மதத்தினதும் கலாசாரங்கள் வேறுபட்டவை. ஆகவே, ஒரு சட்டம் என்ற அடிப்படையில் இவ்வாறு இதனை அரசாங்கம் கையாளப் போகிறது என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இருக்கிறார்.

“அரசமைப்பின் 19ஆவது திருத்தம், தற்போது அனைவராலும் விமர்சிக்கப்படும் விடயமாகக் காணப்படுகிறது. ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் மக்களால் தெரிவுசெய்ய முடியாது. ஜனாதிபதிக்கு எதிராக அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்ய முடியாது, ஜனாதிபதிக்கு அமைச்சுப் பொறுப்புகளை வைத்திருக்க முடியாது. இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் ஜனாதிபதியாகவும் பிரதமராக வர முடியாது. ஜனாதிபதியால் பிரதமரைப் பதவி நீக்கம் செய்ய முடியும், நான்கு வருடங்களுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு போன்ற பல விடயங்கள், 19ஆவது திருத்தச் சட்டத்திலேயே கொண்டுவரப்பட்டது.

“இந்த எந்தவொரு விடயங்களும், 19ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்படவில்லை. ஆகவே, இதனைத் திருத்த வேண்டும் என்பதை, மக்கள் மத்தியில் தெளிவாகக் கூற வேண்டும். இதில் கொண்டுவரப்படும் திருத்தங்கள், யாரையும் பாதிக்கக் கூடாது” என்று, இம்ரான் மஹரூப் மேலும் கூறினார்.

மலையகத்தில்

# ‘தனி வீட்டுத்திட்டங்களே தொடர வேண்டும்’

பா.நிரோஸ்

தமிழ் முற்போக்குக் கூட்டணியால் மலையகத்தில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தனி வீட்டுத் திட்டங்களே, மலையகத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன், புதிய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் புதிய வீட்டுத் திட்டங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல் அவசியம் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தொடர்ந்து உரையாற்றிய அவர், “எங்கள் பகுதியில் காணப்படும் முக்கியமான சில பிரச்சினைகளைப் பேசவேண்டிய தேவை உள்ளது. விவசாய அமைச்சு தொடர்பில் பேசவேண்டும். 365 நாள்களும் விவசாயம் செய்யக்கூடிய மாவட்டமாகக் காணப்படும் நுவரெலியா மாவட்டத்தில், போதுமான உரத்தை விவசாயிகளால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது பற்றாக்குறையாக காணப்படுகிறது” என்றார்.

“மலையகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தனி வீடுகள், புதிய அரசாங்கத்தில் சிறிய மாடி வீட்டுத் திட்டங்களாக கொண்டுவரப்படவுள்ளதாக அறிகிறோம். எனவே, புதிய வீடமைப்புத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியம். தொடர்ந்தும் மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். கட்டாயமாக மலையக மக்களுக்குத் தனி வீட்டுத்திட்டமே அவசியமாக இருக்கிறது.

“உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு, இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை. அதுத் தொடர்பான போராட்டம் ஒன்றும், நுவரெலியா மாவட்டத்தில் இன்று (நேற்று) முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆசிரியர்களை உள்வாங்குவது அவசியமாகும்.

“அரசாங்கத்தின் விவசாயம் தொடர்பான திட்டங்கள் மிகச் சிறந்தவை அதனை வரவேற்கிறோம். எனினும், அவற்றுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு, எப்போதுமே ஆதரவாக இருப்போம். அதேபோல, எதிரான விடயங்களுக்கு எங்களுடைய எதிர்ப்பையும் தெரிவிப்போம்.

“19ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் காணப்படும் நல்ல விடயங்களைப் பிரித்து, 20ஆவது திருத்தமாகக் கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை வரவேற்கிறோம். அது சிறப்பாக அமையும் பட்சத்தில், அதற்கும் ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்க்கிறோம்.

“மாகாண சபைகளின் ஊடாகவே மக்கள் தேவையான விடயங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே, 13 பிளஸ் கொண்டுவரப்பட வேண்டும்” என்றும், இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்தார்.

# ‘விக்கியின் சுயநிர்ணயப் பேச்சு லொலிபப் கேட்பது போல இருக்கிறது’

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஷ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரைக் கடுமையாகச் சாடிய இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, கடைக்குச் செல்லும் அம்மாவிடம், குழந்தை லொலிபப் கேட்பது போலவே, சி.வியின் சுயநிர்ணயம் தொடர்பான பேச்சு அமைவதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்கு சுயநிர்ணயம் வழங்கினால், தெற்கு மக்களின் நிலைமை என்னவாகுமெனவும் கேள்வி எழுப்பிய அவர், வடக்கில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கினால், இடைக்காலக் கணக்கு அறிக்கை போல ஆயிரம் மடங்கு நிதியைப் பாதுகாப்புக்கு ஒதுக்க வேண்டிவருமெனவும் தெரிவித்தார்.

“நாட்டில் நிலவிய 30 வருடகால யுத்தம் நிறைவடைந்து, தற்போது நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் இந்த அமைதியை, நாடாளுமன்றத்துக்குள் இருந்துகொண்டு எவரேனும் சீர்குலைத்து, மீண்டும் யுத்தத்தை உருவாக்கும் வகையிலும் தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் குரோதத்தை அதிகரிக்கும் வகையிலும் சுயநிர்ணய பக்கம் தமிழ் இளைஞர்களை எவரும் ஊக்குவிக்கும் வகையில் கருத்துகளைத் தெரிவிப்பார்களாக இருந்தால், அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும்” என்றார்.

“மேலும், இவ்வாறான கருத்துகளால் ஏமாற்றமடைந்து பயங்கரவாதம் தலைதூக்கினால், தற்போது ஒதுக்கப்பட்டுள்ள இடைக்காலக் கணக்கு அறிக்கைக்குரிய நிதியைப் போல, ஆயிரம் மடங்கு நிதியை நாட்டின் பாதுகாப்புக்காக ஒதுக்க வேண்டி ஏற்படும்.

“இலங்கையின் நாகரிகத்தை கட்டியெழுப்பியது சிங்களவர்களே என்பது இந்த நாட்டின் தொல்பொருள், கல்வெட்டுகளின் மூலம் தெரியவருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் சுயநிர்ணயம் தொடர்பில் பேசியுள்ளார். கடைக்குச் செல்லும் அம்மாவிடம் குழந்தை லொலிப்ப் கேட்பதுபோல இருக்கிறது.

“சி.வி.விக்னேஷ்வரன், இலங்கை அரசாங்கத்துக்கும் சிங்கள மக்களுக்கும், சிங்கள மொழிக்கும் தொடர்ந்து அபகீர்த்தியை ஏற்படுத்துகிறார். இதேவேளை, யாழ். மக்களுக்காக தனியான இரத்தி வங்கி ஒன்றை இராணுவம் உருவாக்கியிருக்கிறது” எனவும் தெரிவித்துள்ளார்.

# கவனிக்கத் தவறும் 'நாவடக்கம்'...

நாவடக்கம், இடம், பொருள், ஏவல் என்பனவெல்லாம் தனிமனித ஒழுக்கம் என்பதற்குள் அடங்கும். எந்த இடத்தில், எதனைப் பேசவேண்டும் என்பதைத் தெரிந்து, தெளிந்து பேசுவதே ஆக்கபூர்வமானதாக இருக்கும். அதைவிடுத்து, விதண்டாவாதகங்களில் மூக்கை நுளைப்பதால் ஏற்படும் பாதிப்புகளை எளிதில் உணர்ந்துகொள்வதில்லை. அப்படியான சம்பவங்கள் தற்போது அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் நீண்டகாலமாக சமாதானத் தூதுவராகச் செயலாற்றியவர் எரிக் சொல்கெய்ம். நோர்வே நாட்டினுடைய சமாதானப் பறவையாகவே எரிக் சொல்கெய்ம் பார்க்கப்பட்டார். அப்படிப்பட்டவரின் வகிபாகம் அறியாமல், அவரைச் சீண்டிப் பார்க்கும் 'சமூகவலைத்தளப் போராளிகள்', வரலாறுகளைத் திசைதிருப்பப் பார்ப்பது வேதனைக்குரியது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையென்பது பெரும் துன்பியல் வரலாறாகும். அப்படுகொலையின் பின்னரான தமிழீழ விடுதலைப் போராட்டம் வேறு திசைநோக்கித் திரும்பியதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய துன்பியல் வரலாற்றைத் தற்போதுள்ள சமூகவலைத்தளப் போராளிகள் நியாயப்படுத்த முனைந்து, அதனை எரிக் சொல்கெய்மே வாக்குமூலம் வழங்குமளவுக்கு விட்டுச் சென்றிருப்பது பெரும் துன்பியல் அனுபவம்தான்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞராகச் செயலாற்றிய அன்டன் பாலசிங்கம் தன்னிடம், ராஜீவ் காந்தியைக் கொலைசெய்தது புலிகள் தான் என்பதை ஒத்துக்கொண்டதாக எரிக் சொல்கெய்ம் ஒப்புவித்திருக்கிறார். இவ்வளவுகாலமும் 'துன்பியல் வரலாறு' என்று மாத்திரம் சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்த அவ்விருண்ட சம்பவத்தை, இப்போது உலகமத்தியில் ஒப்புதல் வாக்குமூலமாக்கியிருப்பது வேதனைக்குரியது. இந்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர்கள் வேறு யாருமில்லை; தங்களைத் தமிழர் காவலாளிகள் என்று மார்தட்டிக்கொள்ளும் புலம்பெயர் தமிழர்களில் சிலர்தான். இப்படிப்பட்டவர்கள் யதார்த்தம் உணர்ந்து செயலாற்ற வேண்டும். இல்லாதவிடத்து, இவ்வளவுகாலமும் கட்டிக்காத்த முயற்சிக்கோட்டை சரிந்துவிடக்கூடும் என்பதைக் கவனத்திற்கொள்க.

எல்லாவற்றுக்கும் முட்டுக்கொடுக்கப் போகாதீர்கள். சில விடயங்களைக் கடந்துசெல்வதே சிறந்தது. சிலவற்றுக்கும் விளக்கம் கொடுக்கப்போய், அது தவறான பாதைக்கு வழிகாட்டவும் கூடும். தெரியாத விடயங்களில் நாவடக்கம் பேணுவதே சிறந்தது. அத்தகைய நாவடக்கம் கோழைத்தனம் எனக் கருதப்படுவதில்லை. அவ்வாறான நாவடக்கங்கள் பல சமயங்களில் ஒப்புதல் வாக்குமூலங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கக்கூடும். இதைப் புரிந்துகொண்டாலே பல நன்மைகளை நீங்கள் விரும்பும் சமூகத்துக்குப் பெற்றுக்கொடுத்துவிட முடியும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வெறுமையை நோக்கிய பயணம், அந்தகார இருளுக்குள் இழுத்து, ஒருவரைத் தனிமைப்படுத்தி விடும். வெறுப்பின் உச்சநிலை, தனிமைக்கு இட்டுச் செல்கின்றது. எச்சரிக்கையாக இருப்பவர்கள், வலிந்து துன்பங்களைக் கோர்க்க மாட்டார்கள்.

ஏதாவது கருமங்கள் இருந்தால், அதைச் செய்துகொண்டே இருந்தால் விரக்தி நிலை ஏன் வருகின்றது? வெறுமனே இயங்காது இருந்தால், எதுவுமே செய்யத் தெரியாத உன்மத்த நிலைக்குள் தள்ளப்படுவார்கள்.

சுறுசுறுப்பு, சந்தோசமானதும் நிறைவானதுமான வாழ்வைத் தரவல்லது. இவர்கள் நெருப்புக்குள்ளும் குளித்து எழுவார்கள்; பனிக்கட்டியில் உருண்டு, படுத்து நிமிர்வார்கள்.

கடமையைச் செய்தால், வெறுமை என்பது ஏது? தன்னை மட்டுமே எண்ணினால் பரந்த சிந்தனை வராது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# புதிய அரசமைப்பும் சிறுபான்மையினரின் எதிர்காலமும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

புதிய அரசமைப்பாக்க முயற்சிகள் இலங்கைக்குப் புதியனவல்ல. 1994ஆம் ஆண்டு தொட்டு, இதற்கான பலமுயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், இன்றுவரை முழுமையாகச் சாத்தியமாகவில்லை.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளைச் சாத்தியமாக்கும் வல்லமையைக் கொண்டுள்ளன. அரசாங்கம், நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதும் வலுவற்ற எதிர்க்கட்சி ஆகிய இரண்டு காரணிகளும் இங்கு பிரதானமானவை.

புதிய அரசமைப்பு எவ்வாறு அமையப்போகிறது என்பதைக் கூறுவது கடினம். அதில், சிறுபான்மையினரின் குரல்கள் எடுபடப்போவதில்லை என்பதை மட்டும் நம்பலாம். அரசின் தயவிலேயே, சிறுபான்மையினர் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் பின்புலத்திலேயே, 'வீராவேசப்' பேச்சுகளைச் சில தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் நிகழ்த்தியதைக் கடந்தவாரம் கண்டோம். அது வேண்டுமாயின், சமூக வலைத்தளங்களில் 'கிளுகிளுப்பு' ஊட்டுவதற்கு அப்பால், பயனேதும் அற்றது.

அரசியல் என்பது, இயலுமானவர்களுக்கானது; நடைமுறை யதார்த்தம் பற்றியது. அரைநூற்றாண்டு கால இலங்கை அரசியலில், ஈழத்தமிழ் அரசியல் செய்தது கிட்டத்தட்ட இதுதான். 'அப்புக்காத்து அரசியலை' விட்டுவிட்டு, இனியாவது நடைமுறை குறித்து, இலங்கையில் வாழும் மிகச் சாதாரணமான தமிழ் மக்கள் பற்றியும் அவர்கள் எதிர்காலம் குறித்தும் கவனம் செலுத்துவது பிரதானமானது.

தேசிய பிரச்சினை, இன்னமும் இலங்கையின் பிரதான முரண்பாடாக உள்ளது. அதில் பகுதியையேனும் தீர்க்காமல், அதிலும் அடிப்படையான பிற பிரச்சினைகளைப் பயனுற விளிக்க இயலாது. பொருளாதாரமும் சமூக நீதியும் ஜனநாயகமும் மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் சட்டமும் ஒழுங்கும் தேசிய பிரச்சினையுடன் தவிர்க்க இயலாதவாறு பிணைந்துள்ளன.

ஒட்டுமொத்தமாக, அனைத்து மக்களும் சிறுபான்மைத் தேசிய இனங்களும் இன, மதக் குழுக்களும் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளையும் விளிக்குமாறு ஒரு பரந்துபட்ட வெகுசன அமைப்புக்கான குறுகியகால, நீண்டகால வேலைத் திட்டங்களை விருத்தி செய்யாமல், எவ்வகையிலும் பேரினவாதத்துக்குச் சவால்விட இயலாது.

தம்மைப் பாதிக்கும் ஒவ்வொரு பிரச்சினையின் தீர்வும், அப்பிரச்சினையுடன் நேரடியாக உறவற்ற வேறு பிரச்சினைகளின் தீர்வுகளையும் வேண்டுகிறது என்பதை மக்கள் உணருமாறு, பிரச்சினைகள் பற்றி மட்டுமன்றி, அவற்றிடையிலான பிணைப்புகளைப் பற்றியும் நல்ல விளக்கத்தை இது வேண்டுகிறது.

இதைச் சாத்தியமாக்கப் பரந்துபட்ட கூட்டணி ஒன்றின் உருவாக்கம் அவசியம். அதற்குப் பொது இலக்குகளும் குறுகிய கால வேலைத்திட்டங்களும் தேவை. எனினும், ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்தை அதன் பிற்போக்குத் தன்மையிலிருந்து விலக்க வேண்டியுள்ளது.

இப்போது, தமது சுய முன்னேற்றத்தைத் தவிர வேறெந்த நோக்குமற்ற தலைவர்கள் வழிநடத்தும் முஸ்லிம்கள் மத்தியிலும் மலையகத் தமிழர் மத்தியிலும் ஆற்ற வேண்டிய பணிகள் உள்ளன. இவற்றைத் தெளிவான அடையாளம்கண்ட பரந்துபட்ட மக்கள் கூட்டணி ஒன்று தேவையாகிறது.

பரந்துபட்ட கூட்டணியின் உருவாக்கம், பிறவற்றை உள்ளடக்கும் அணுகுமுறையொன்றையும் அடிப்படை வேறுபாடுகளிலிருந்தும் பொது வேலைத்திட்டம் ஒன்றுக்காக ஒன்றுபடும் ஆற்றலையும் வேண்டுகிறது. சிறுபான்மைத் தேசிய இனங்களின் அடையாள, பிரதேச உரிமைகளை மதிப்பதுடன் அதிகாரப் பரவலாக்கல் பற்றித் திறந்த மனமுடைய சிங்களத் தேசியவாதிகளும் கூட்டாளிகளாக வல்லோரே.

முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசியவாதிகள், நாட்டில் பிற ஒடுக்கப்பட்ட மக்களுடன் பொதுநோக்கம் காண ஊக்குவிக்கப்பட வேண்டும். குறுகிய தேசியவாத அரசியலாலும் தேசிய ஒடுக்குதலாலும் போராலும் தேசிய இனங்களிடையே பல தசாப்தங்களாகக் கட்டப்பட்ட அவநம்பிக்கைத் தடைகளை நீக்குவதே நாம் எதிர்நோக்கும் அதி அவசரமான பணியாகும்.

நாடாளுமன்றப் பாதை பற்றிய ஒரு மாயை, தொடர்ந்து சிறுபான்மையினரிடம் இருந்து வந்துள்ளது. பெரும்பான்மை-நிலை, இன-மய்ய அரசியல் ஆதிக்கத்தை நோக்கிய வலுவான போக்கைக் கொண்ட தேர்தல் அரசியலில் தங்கியிருப்பதைக் குறைக்கும் மூலோபாயங்களின் சேர்க்கை தேவை.

இலங்கையில் மோசமாகிவரும் பொருளாதாரமும் ஜனநாயகத்துக்கு எதிரான மிரட்டல்களும், முற்போக்கு, ஜனநாயகச் சக்திகளின் தலைமையில் தேசிய விமோசனம் அல்லது, பேரினவாதச் சக்திகளின் தலைமையிலான பாசிசமும் இராணுவ ஒடுக்குமுறையும் எனும் இரு பாரிய தெரிவுகளை, மக்கள் முன் முன்வைக்கின்றன. இதுதான் இன்று எம்முன்னுள்ள யதார்த்தம்.

இந்தநிலையை எவ்வாறு வந்தடைந்தோம் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. இதுகுறித்துப் பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட பின்வருமாறு சொல்கிறார்: "மூன்று தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டுப் போரை முன்னே உந்தியது இனத்துவத் தேசிய சித்தாந்தங்களேயன்றிச் ஜனநாயக இலட்சியங்களல்ல என நாம் உணரும் போது, அது மேலும் அச்சமூட்டுகிறது. இனத்துவத்தின் வெற்றி, ஜனநாயகத்தின் தோல்வியாகியது. இச் செயற்பாங்கை மறுதலையாக்கி, இனத்துவத்தினதும் இனத்துவ தேசியவாதங்களினதும் பிரிவுசார்ந்த, விலக்கி நிற்கும் உறுதிமொழியை மழுங்கடிக்கும் ஆற்றலுடையதோர் அரசியல் சக்தியாக ஜனநாயகத்தை மீளக் கொணர்வதே உள் நாட்டுப் போருக்குப் பிந்திய இலங்கையின் சவால்".

சிங்கள, தமிழ்த் தேசியவாதங்கள் தொடர்பாக, இலங்கையின் சொந்த அனுபவத்தை எடுப்பின், ஆதிக்கத்திலுள்ள இவ்விரு குழு அரசியல் கற்பனைகளும் உண்மையில் தம்மிடையோ தாம் பெயராண்மைப்படுத்தும் சமூகங்களிடையோ ஆக்கமான அரசியல் உரையாடல் எதையும் வசதிப்படுத்தவில்லை.

ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிகளின் தலைமையிலான அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளுக்கு இடையிலான அமைதிப் பேச்சுகளின் போது, உரையாடலின் இயலாமை எனும் பிரச்சினை, மனதில் பதியுமாறு நிகழ்ந்தது.

சிங்கள, தமிழச் சமூகங்களிடையே, பெரும்பான்மை, சிறுபான்மைச் சமூகங்கள், இலங்கை எனும் தேச அரசுக்குள் சமமானோராக வாழ்வதற்கு, ஒரு பொது அரசியல் களத்தைக் கண்டறியும் நோக்கிலான பேச்சுவார்த்தைகள் 1950களின் நடுப்பகுதி தொட்டு, இன்று வரை முன்னெடுக்கப்பட்டன. அத்தகைய பேச்சுவார்த்தைகள் யாவுமே, ஒரு பொதுக் களத்தையன்றி வேறுபாடுகளையும் இணங்க இயலாதவற்றையும் பகைமைகளையுமே கண்டறிந்தன. இதன் தொடர்ச்சியையே இன்றைய புதிய அரசமைப்பு பற்றிய கதையாடல்களிலும் காண்கிறோம்.

பேரினவாதம் இப்போது, சிங்கள மக்களின் அரசியலில், குறிப்பாகப் படித்த, நடுத்தர வர்க்கத்தினரில் கணிசமானோரிடையே, ஆழ வேரூன்றி உள்ளது. சாதாரண சிங்கள மக்கள், சிறுபான்மையினர் குறித்த அச்சங்களுடன் உள்ளனர். போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளும் பின்னர் தமிழ்த் தலைமைகள் எடுத்ததற்கெல்லாம் இந்திய, அமெரிக்க, ஐ.நா, சர்வ தேசக் குறுக்கீடுகளை - அவை அசாத்தியமானவையாயினும் - விடாது வேண்டுவதையும் பற்றியன. சிங்களப் பேரினவாதத்தின் ஆதரவுத் தளம் அந்த அச்சமே. சிங்கள மக்களின் நியாயமற்ற அச்சங்களைப் போக்கும் அக்கறை, தமிழ் அரசியல் தலைவர்களிடம் இருந்ததில்லை.

இன்றைய நிலையில், இந்த அச்சங்களைக் களைவதும் பரந்துபட்ட ஒற்றுமையின் அடிப்படையில் ஒன்றிணைவதும் அவசியமாகிறது. ஒன்றிணைவதற்கான தொடக்கப்புள்ளியாக, எதிர்பார்த்திருக்கும் புதிய அரசமைப்பு அமையவியலும். இதற்கு மூன்று விடயங்கள் முன்நிபந்தனையால் வேண்டும்.

1. புதிய ஜனநாயக அரச கட்டமைப்பில், இலங்கையின் தேசிய இனங்கள் அவற்றின் சுயவிருப்பின் அடிப்படையில் உயர்ந்தபட்ச சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் பிரிந்துபோகும் உரிமையுடனான சுயாட்சியுடன் கூட்டிணைவான (Confederation) ஐக்கிய இலங்கை மக்கள் குடியரசைக் கட்டியமைப்பதை இலக்காகக் கொள்ளுதல்.

2. இவற்றை வென்றெடுக்கத் தேசிய இனங்களிடையே ஐக்கியம் அவசியமாவதால் தேசிய இனங்களிடையேயான அடக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு உற்பத்தியாளர்கள், பெண்கள், சாதிரீதியாக அடக்கப்பட்டோர் ஆகியோரை இணைத்தும் அவர்களின் பொது உடன்பாட்டுடனும் வெகு ஜனப் போராட்டங்களை அந்தந்தத் தளங்களிலும் கூட்டிணைந்தவையாக முன்னெடுத்தல்.

3. சிறுபான்மையினர் தமது உரிமைகளைத் தக்கவைக்கவும் நலன்களைக் காப்பதற்குமான ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்பல்.

## கடிதங்கள்

### அங்கிகரிக்கப்பட்ட சுற்றுலாத் தளமாக கல்லரப்பை அறிவிக்கவும்

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மஜீத் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள, கல்லரப்பு பிரதேசம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மாறி வருகின்றது.

சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் அதிகளவான உள்ளூர் மக்கள் உணவு சமைத்து சாப்பிடுவதற்காகவும் ஓய்வு எடுப்பதற்காகவும் வருகின்றனர். அவர்கள் புகைப்படங்கள் எடுத்து, சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி வருவதால், இந்த இடத்துக்குச் செல்லவேண்டும் என்று தூண்டுதல் ஏற்படுகின்றது.

மலைநாட்டுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற நிலத்தோற்ற அமைப்பைக் கொண்ட வனப்புகள் இங்கு இயற்கையாக அமைந்துள்ளன. கற்களும் ஓடைகளும் மரங்களும் நிறைந்து காணப்படுகின்றன. எனவே, இந்தப் பிரதேசத்தை அங்கிகரிக்கப்பட்ட அரச சுற்றுலாத் தளமாக மாற்ற வேண்டும் என, சுற்றுலாப் பயணிகள் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இப்பிரதேசத்துக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் உணவுகள், பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் போத்தல்கள், குப்பைகள் ஆகியவற்றை நீர்நிலைகள் போடுவதால் சூழல் மாசுபடும் ஆபத்துக் காணப்படுவதால் இவற்றைச் சுத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சுற்றுலாப் பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மாலை நேரங்களில் யானைகளின் நடமாட்டம் காணப்படுவதால், அச்சம் காரணமாக, சுற்றுலாப் பயணிகள் குறித்த நேரத்துக்குள் சென்று வருகின்றனர். இதனால் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அங்கிகரிக்கப்பட்ட சுற்றுலாத் தளமாக மாற்ற வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–ஏ.ஆர்.எம். றிபாஸ்

# அமானா வங்கியின் தலைவராக அஸ்கி அக்பரலி நியமனம்

அலி அஸ்கர் (அஸ்கி) அக்பரலி அமானா வங்கியின் பணிப்பாளர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வங்கியின் ஸ்தாபகத் தலைவரான ஒஸ்மான் காசிம் தனது கடமைகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்து, இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

அங்கிகாரம் பெற்ற வணிக வங்கியொன்றின் பணிப்பாளர் சபையில் பணியாற்றும் உயரதிகாரி ஒருவர், ஆகக்கூடியது ஒன்பது வருடங்கள் வரை மாத்திரமே பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கலாம் என்ற இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின் பிரகாரம், இலங்கையில் இஸ்லாமிய வங்கியியல் துறையில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்டுள்ள ஒஸ்மான் காசிம், அமானா வங்கியில் பணிப்பாளர் சபையில் ஒன்பது வருட காலமாகப் பணியாற்றியிருந்ததைத் தொடர்ந்து, ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். வங்கியிலிருந்து ஓய்வு பெற்றாலும், வங்கியின் முதல் 10 பங்குதாரர்களில் ஒருவராக அவர் தொடர்ந்து திகழ்கிறார்.

'அக்பர் பிரதர்ஸ்' நிறுவனத்திலிருந்து பிரேரிக்கப்பட்ட பணிப்பாளராக அஸ்கி அக்பரலி, அமானா வங்கியுடன் 2020 ஜுலை மாதத்தில்



இணைந்தார். வங்கியில் ஒன்பது வருடங்கள் பணிப்பாளராகக் கடமையாற்றி, ஓய்வு பெற்ற தயீப் அக்பரலியின் பொறுப்புகளை இவர் ஏற்றிருந்தார். மேலும், அஸ்கி அக்பரலி ஜோர்தான் இராஜ்ஜியத்தின் தூதுவராகவும் திகழ்கின்றார். கலிபோர்னியா அரச பல்கலைக்கழகத்திடமிருந்து தொழிற்றுறைசார் பொறியியல் பிரிவில் BSc பட்டம் பெற்றதுடன், சான்றளிக்கப்பட்ட நிபுணத்துவ முகாமையாளர்கள் கல்வியகத்தின் அங்கத்தவராகவும் திகழ்கின்றார். பழங்கால கார்கள் மீதான இரசிகராக அஸ்கி அக்பரலி திகழ்வதுடன், 'Classic and Vintage Automobiles of Ceylon' எனும் புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார். இலங்கையின் Classic Car Club இன் காப்பாளராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய ரீதியில் தேயிலை ஏற்றுமதிக்காகப்

**அலி அஸ்கர் (அஸ்கி) அக்பரலி அமானா வங்கியின் பணிப்பாளர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வங்கியின் ஸ்தாபக தலைவரான ஒஸ்மான் காசிம் தனது கடமைகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது**

புகழ்பெற்றுள்ள, இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட கூட்டாண்மை நிறுவனங்களில் ஒன்றான அக்பர் பிரதர்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் அக்பர் குரூப் நிறுவனத்தின் உற்பத்தி, சொத்துகள் விருத்தி, ஹோட்டல்கள், விருந்தோம்பல், சுகாதாரப் பராமரிப்பு, வலுப் பிறப்பாக்கல், பொதியிடல் மற்றும் அச்சிடல், சரக்குக் கையாளல், சூழல் சேவைகள் போன்ற பிரிவுகளில் இயங்கும் துணை நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் Renewgen (Pvt) Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளராகத் திகழ்வதுடன், Windforce (Pvt) Ltd, Hermitage Resorts (Pvt) Ltd, Uthurumaafaru Holding (Pvt) Ltd Maldives, Lhaviyani Holdings (Pvt) Ltd, Cocoon Investments (Pvt) Ltd Maldives ஆகியவற்றின் தலைவராகவும் Alumex PLC இன் பணிப்பாளராகவும் அஸ்கி அக்பரலி திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பிஎல்சி 2019/20 நிதியாண்டில்

# உறுதியான நிதிப் பெறுபேறுகள் பதிவு

2019/20 நிதியாண்டில் கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் பிஎல்சி (CLC) உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது. சவால்கள் நிறைந்த ஆண்டிலும் தொடர்ச்சியாகச் சிறப்பாச் செயலாற்றி நிதியாண்டைப் பூர்த்தி செய்திருந்தமை விசேட அம்சமாகும். அதன் சிறந்த நிதிப் பெறுபேறுகளை மேலும் உறுதி செய்யும் வகையில் ICRA லங்கா லிமிடெட்டால் SL (A) உறுதியான தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதனூடாக நிறுவனத்தின் நம்பிக்கை, பாதுகாப்பு, உறுதித்தன்மை போன்றவற்றுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன.

கடந்த நிதியாண்டில், டிஜிட்டல் கட்டமைப்புகளினூடாக நுண் சேமிப்புகளை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதியை இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட இலங்கையின் முதலாவது நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகத் தெரிவாகியிருந்தமையும் விசேட அம்சமாகும். வரிக்குப் பிந்திய இலாபமாக 1,547 மில்லியன் ரூபாயை CLC பதிவு செய்திருந்தது. இது முன்னைய நிதியாண்டில் பதிவாகியிருந்த ரூ. 1,198 மில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 29 சதவீத அதிகரிப்பாகும். நிதியங்களின் செலவு 8 சதவீதத்தால் குறைந்திருந்ததுடன், உபரிச் செலவுகள் (overheads) 12 சதவீதத்தால் குறைந்திருந்தது. தொழிற்படாக் கடன்களின் (NPL) பெறுமதி 7.05 சதவீதமாகக் காணப்பட்டதுடன், துறையின் NPL பெறுமதி 11 சதவீதத்தை விட உயர்வாகப் பதிவாகியிருந்தது. CLC இன் நிறைவேற்றுப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கிரிஷான் திலகரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "2019/20 நிதியாண்டு என்பது, எமது வாழ்நாளில் நாம் எதிர்கொண்டிருந்த மிகவும் சவால்கள் நிறைந்த ஒரு நிதியாண்டாக அமைந்துள்ளது. முதல் 2019 ஏப்ரல் மாதத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து வருட நிறைவில் பொருளாதாரம் மீண்டெழ முனையும் சந்தர்ப்பத்தில், கொவிட்-19 தொற்றுப் பரவல் ஆரம்பித்து மேலும் சவாலைத் தோற்றுவித்திருந்தது. எவ்வாறாயினும் சவால்கள் நிறைந்த சூழலிலும், முன்னைய ஆண்டுக்கு நிகரான நிதிப் பெறுபேறுகளை CLC பேணியிருந்ததுடன், வரிக்குப் பிந்திய இலாபப் பெறுமதிகளை




மேம்படுத்தியிருந்தது. துறையின் NPL பெறுமதி அதிகரித்த போதிலும், எமது NPL பெறுமதியைக் குறைந்தளவில் பேண முடிந்திருந்தது" என்றார்.

திலகரட்ன தொடர்ந்து குறிப்பிடுகையில், "2018/ 2019 ஆம் ஆண்டுகளில் துறையில் தளம்பல் நிலை காணப்பட்ட போதிலும், CLC தொடர்ந்தும் தனது வாடிக்கையாளர் இருப்புக்கு நேர்மையானதாகச் செயலாற்றும் வகையில், எமது நிதிச் சேவைகளை சகல வேளைகளிலும் அணுகக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தோம். கடன் இலாகாக்களைச் சீராகப் பேணியிருந்ததுடன், உபரிச் செலவுகளைக் கட்டுப்பாட்டினுள் கொண்டிருந்தமையால் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்ய முடிந்தது. வைப்பாளர்கள் மத்தியில் உறுதியான நம்பிக்கையை CLC கட்டியெழுப்பியுள்ளதுடன், வைப்பாளர்களின் பெறுமதி 25 பில்லியன் ரூபாயாக அதிகரித்து, மொத்த நிதியளிப்பின் 52 சதவீதத்தைக் கொண்டுள்ளது. நிறுவனத்தின் இதர நிதியளிப்பு மூலங்களில் DFI பெறுகைகள், வங்கி நிதியளிப்புகள், மூலதனச் சந்தைத் தீர்வுகள், முழு அளவிலான கடப்பாட்டு தீர்வுகள் போன்றன அடங்கியுள்ளன. CLC இன் தகைமைப் பெறுமதி Tier 1 மூலதனத்தில் ரூ. 17 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. இது இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்டிருந்த மூலதன போதுமை கடப்பாடுகளை விட உயர்வானதாக அமைந்திருந்தது. இதனூடாக, நாட்டில் காணப்படும் அதிகளவு மூலதன இருப்பைக் கொண்டுள்ள நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக CLC திகழ்ந்திருந்தது". என்றார்.

வேகமாக வளர்ந்து வரும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனம் எதிர்காலத்தில் தங்கக் கடன்கள், இஸ்லாமிய நிதி வசதிகள், நுண் நிதிச் சேவைகளினூடாக வளர்ச்சியைப் பதிவு செய்வதற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. CLC தனது தங்கக் கடன் அடகுச் சேவையை முன்னைய நிதியாண்டில் ஆரம்பித்திருந்ததுடன், தற்போது தனது 65 கிளைகளின் 55 கிளைகளுக்கு விஸ்தரித்துள்ளது.

CLC இன் வர்த்தக நாம பெறுமதியை மேலும் மேம்படுத்தும் வகையில், 2019/20 காலப்பகுதிக்கான சிறந்த 50 வர்த்தக நாமங்களில் ஒன்றாக நிறுவனம் தரப்படுத்தப்பட்டிருந்தது. இதனூடாக, இலங்கையில் காணப்படும் முன்னணி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக பொது மக்கள் மத்தியில் உயர் வரவேற்பைப் பெற்றுள்ளமையைப் பிரதிபலித்துள்ளது.

LOLC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாக CLC திகழ்கின்றது. இலங்கையிலுள்ள முன்னணி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ளதுடன், தற்போது லீசிங், நிலையான வைப்புகள், சேமிப்புகள், கடன்கள், flexicash, நுண் நிதியியல், இஸ்லாமிய நிதிச் சேவைகள், தங்கக் கடன்கள் முதல் ஃபக்டரிங் போன்ற சேவைகளை வழங்குகின்றது. உறுதித்தன்மை, தங்கியிருக்கும் திறன் போன்றவற்றில் நம்பிக்கையை வென்ற வர்த்தக நாமமாக CLC வளர்ச்சியடைந்துள்ளதுடன், தனது வாடிக்கையாளர் வலையமைப்பினூடாக, நிதி வலுவூட்டலை வழங்கும் பிரதான செயற்பாட்டாளராக செயலாற்றி, நாடு முழுவதிலும் பிரதான தொடுகைப் பகுதிகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.




# சந்தையில் GRI உள்நாட்டு டயர்

உள்நாட்டு உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிக்கும் எண்ணக்கருவை வலுவூட்டும் வகையில், பெரேரா டயர் சேர்விஸ் நிறுவனம், உள்நாட்டு உற்பத்தியான GRI டயர்களை சந்தையில் விநியோகிக்கும் ஏக முகவராகப் பொறுப்பேற்றுள்ளது. GRI டயர் உற்பத்தி செய்யும் வரையறுக்கப்பட்ட குளோபல் இறப்பர் இன்டஸ்ட்ரீஸ் தனியார் நிறுவனத்துடன், பெரேரா டயர் சேர்விஸ் நிறுவனம் விநியோக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

இதுவரை அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் GRI வர்த்தக நாமத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்ட சகல விதமான கைத்தொழில் சார் டயர்கள், ட்ரக்டர் டயர்கள், போர்க் லிப்ட் டயர்களை இப்பொழுது உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்கும் பெற்றுக்கொள்ள முடியும்.

டயர் உற்பத்தித் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அனுபவங்களைக் கொண்டுள்ள GRI நிறுவனம், சுமார் 50 நாடுகளுக்கு டயர்களை ஏற்றுமதி செய்கிறது. மேலும், எமது நாட்டின் மிகப் பெரிய டயர் உற்பத்தி நிறுவனமாகவும் இலங்கையின் முதலாவது ரேடியல் கமத்தொழில் டயர் உற்பத்தியாளராகவும் GRI நிறுவனம் விளங்குகிறது.

### COVID–19 தொடர்ந்து சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புத்துயிர் பெற

# செலான் வங்கி நடத்திய வெபினார்கள்



திரு.சுதாகரன் பேரம்பலம்
பணிப்பாளர் : ஆராய்ச்சி மற்றும் நுகர்வோர் நுண்ணறிவு பிரிவு

'அன்புடன் அரவணைக்கும்' செலான் வங்கி, இலங்கையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இரண்டு வெபினார்களை முடக்க காலத்திலும் அதற்குப் பின்னரும் நடத்தியது. அந்நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து, COVID-19 தாக்கத்தில் இருந்து மீள்வரும் பயணத்தின் பங்காளியாக வங்கியும் இருப்பதை உறுதிசெய்யும் ஒரு முயற்சியாக இது அமைந்தது. COVID-19 நோயின் தாக்கங்களிலிருந்து எவ்வாறு சிறந்த முறையில் மீள்வது என்பது குறித்த வணிக ஆலோசனையை வெபினார்கள் வழங்கியதுடன், பணப்புழக்க மேலாண்மை, விநியோகச் சங்கிலி மேலாண்மை, சிறந்த வணிக செயல்முறைகளுக்குப் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற முக்கியமான தலைப்புகளை உள்ளடக்கியது.

'இலங்கை பொருளாதாரம் மீது COVID-19 இன் தாக்கம்', 'புதிய சவால்களுக்கு மத்தியில் வணிக மூலோபாயத்தை எவ்வாறு மறுவடிவமைப்பது / மறுவரையறை செய்வது' என்ற தலைப்புகளின் கீழ் வெபினார்கள் நடத்தப்பட்டன. இன்றைய பொருளாதார சூழலுக்கு முகம்கொடுப்பதற்கும், வளரவும், வெற்றிபெறவும் சிறு மற்றும் நடுத்தர துறைக்கு தேவையான ஆதரவு இருப்பதை உறுதிசெய்ய, 'அன்புடன் அரவணைக்கும்' வங்கி என்ற வகையில், செலான் வங்கி செயல்படுகிறது. இத்துறையின் தற்போதைய தேவைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்ட செலான் வங்கி, முறையே சிங்களம், தமிழில் வெபினார்களை ஏற்பாடு செய்து, சிங்களம், தமிழ் வணிக சமூகத்தை உள்ளடக்குவதை உறுதிசெய்தது.

இதன் மூலம், இலங்கையில் உள்ள பெரும்பான்மையான SME உரிமையாளர்களை உள்ளடக்கிய கணிசமாக பரந்த பார்வையாளர்களை அடைந்தது. சிறு மற்றும் நடுத்தர துறையினருக்கு இலங்கையில் நடைபெற்ற முதல் தமிழ் வெபினார் ஆகவும் இது இருந்தது. சிறு மற்றும் நடுத்தர துறையினர் 300 பேர் கலந்துகொண்ட வெபினார்கள் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டன.

சிரேஷ்ட பொருளியலாளர் மற்றும் சிறு மற்றும் நடுத்தர துறை அபிவிருத்தி ஆலோசகருமான ஹசித விஜேசுந்தர வழிநடத்திய முதல் வெபினாரில் மொத்தம் 125 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். ஸ்பார்க்வின் ரிசர்ச் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் நுகர்வோர் நுண்ணறிவு பிரிவின் பணிப்பாளர் சுதாகரன் பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற இரண்டாவது வெப்பினாறில் மொத்தம் 175 பேர் பங்கேற்றனர். COVID-19 நோயால் விளைந்த புதிய சவால்களை சமாளிப்பதற்கான பயனுள்ள நுண்ணறிவு, வழிகாட்டுதல், நடைமுறை அணுகுமுறைகளை அவர்கள் வழங்கினர்.

## பங்குச் சந்தை

COLOMBO STOCK EXCHANGE

2020.08.27

| அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண் | S&P SL20 விலைச் சுட்டெண் |
|---|---|
| 5,333.32 | 2,353.27 |

## நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2020.08.27

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| புளூ டயமண்ட் | 0.20 | 0.30 | 0.10 |
| லக்சபான | 12.50 | 15.60 | 3.10 |
| கெல்சே | 30.50 | 34.80 | 4.30 |
| பீகசஸ் ஹோட்டல் | 23.70 | 27.00 | 3.30 |
| ஹொரண | 20.60 | 22.80 | 2.20 |
| மஹாவலி ரீச் | 22.80 | 24.50 | 1.70 |
| ஃபோட் லேண்ட் | 9.40 | 10.10 | 0.70 |
| சிலோன் கார்டியன்ட் | 73.20 | 77.70 | 4.50 |
| சிட்றஸ் ஹிக்கடுவ | 5.60 | 5.90 | 0.30 |
| களனி டயர்ஸ் | 57.00 | 60.00 | 3.00 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| பேருவளை ரிசோட்ஸ் | 0.80 | 0.70 | (0.10) |
| ஆர்ஜஎல் புரொப்படீஸ் | 4.40 | 4.20 | (0.20) |
| அமானா பேங்க் | 2.40 | 2.30 | (0.10) |
| டில்மா சிலோன் | 659.00 | 631.70 | (27.30) |
| களனி வெலி | 69.70 | 67.00 | (2.70) |
| அமாகா லெய்ஷர் | 30.00 | 29.00 | (1.00) |
| பைரஹா பார்ம்ஸ் | 92.80 | 89.80 | (3.00) |
| லோட்டர்ஸ ஹைட்ரஸ் | 6.60 | 6.40 | (0.20) |
| ரேணுகா கெப்பிட்டல் | 3.50 | 3.40 | (0.10) |
| பிரின்ட்கெயார் பிஎல்சி | 28.30 | 27.50 | (0.80) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**TT RATES**
ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 27 AUGUST 2020

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 131.68 | 137.91 |
| Canadian Dollar | 198.91 | 144.45 |
| Chinese Yuan (Renminbi) | 26.25 | 27.85 |
| Euro | 216.63 | 224.25 |
| Japanese Yen | 1.72 | 1.79 |
| Singapore Dollar | 133.77 | 139.09 |
| Sterling Pound | 242.16 | 250.70 |
| Swiss Franc | 201.24 | 209.05 |
| US Dollar | 184.08 | 188.48 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 494.24 |
| Kuwait | Kuwait Dinar | 609.40 |
| Oman | Oman Rial | 483.94 |
| Qatar | Qatar Riyal | 51.16 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 49.67 |
| UAE | UAE Dirham | 50.72 |

**சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை**

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரென்ட் | 45.73 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 46.05 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 48.40 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 48.07 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 44.01 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2020 ஒகஸ்ட் 27 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்**

| | |
|---|---|
| மறு நாள் | 5.53 |
| 7 நாள்கள் | 5.92 |
| 1 மாதங்கள் | 6.05 |
| 3 மாதங்கள் | 6.96 |
| 6 மாதங்கள் | 7.61 |
| 12 மாதங்கள் | 8.50 |

## பண்புகள் மிக முக்கியம்

Biz Tips

**செயல்திறன்**

வேகமாகவோ, குறைந்த செலவிலோ, குறந்த பொருள்களோடோ ஒரு செயலை முடிக்க வழிவகைகள் கண்டறிதல், செயல்படுத்துதல்,

**பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்**

இலக்குகளை அடைய புதிய அசாதரணமான தீர்வுகளை கண்டறிதல்,

தடை வரும்போது மாற்று தீர்வை செயல்படுத்துதல்

புதிய வழிமுறைகளை தொடர்ந்து கண்டறிய முனைதல்.

**வலியுறுத்தல்**

பிரச்சனைகளையும் கருத்து வேறுபாடுகளையும் மற்றவர்களோடு தைரியமாக நேரடியாக எடுத்து வைத்தல்,

மற்றவர்கள் செய்ய வேண்டிய பணிகளை எடுத்துரைத்து வேலை வாங்குதல்.

**கண்காணித்தல்**

இலக்கை அடைய போட்ட திட்டப்படி செயல்கள் நடைபெறுகிறதா என்று அறிய நடைமுறைகளை உருவாக்குதல் - செயல்படுத்துதல்

தானே திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் செயல்பாடுகளையும் கண்காணித்தல்.

**ஊழியர் நலனில் அக்கறை**

தொழிலாளிகளின் நலத்தை மேம்படுத்த செயல் ஆற்றுதல்

அவர்களுடைய சொந்த நலனிலும் அக்கறை கொள்ளுதல்.



# இதற்கு மேலும் மௌனம் காக்க முடியாது

## எமது கல்வி நிறுவனங்களில் வன்முறையை ஒழித்தல்

டி ஜே

ஒரு பிள்ளை, மற்றொரு பிள்ளைக்கு அடித்தால், அதை 'வலுச்சண்டை' என்கிறோம்.
ஒரு பிள்ளை, வயதுவந்த ஒருவருக்கு அடித்தால், அதை 'விரோதம்' என்கிறோம்.
வயதுவந்த ஒருவர், பிறிதொரு வயதுவந்தவருக்கு அடித்தால், அதைத் 'தாக்குதல்' என்கிறோம்.
வயதுவந்த ஒருவர், ஒரு பிள்ளைக்கு அடித்தால், அதை 'ஒழுக்கப்படுத்தல்' என்கிறோம்.

– ஹெய்ம் ஜினொற்

உலகின் மறுகோடியில் இடம்பெற்ற ஜோர்ஜ் புளொய்ட்டின் படுகொலை பற்றிக் கேள்விப்பட்டபோது, உள்ளம் கலங்கியது. ஈவிரக்கமற்ற அந்தக் கொடுமைக்கும் மிலேச்சத்தனத்துக்கும் எதிராக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை, அமெரிக்கப் பொலிஸார் அடித்துத் துரத்துகின்ற காணொளிக் காட்சியில், பொலிஸாரை எதிர்த்து நிற்கத் துணிந்த ஒரு முதியவரை, பலவந்தமாக உதைத்து விழுத்திய காட்சியை கண்டபோதும், இந்த அட்டூழியங்களை ஒப்புக்கொள்ள மறுத்ததுடன் தாக்கியவர்களைப் பாதுகாக்க முற்பட்ட அமெரிக்க ஜனாதிபதியின் கூற்றை வாசித்தபோதும் எனது உணர்ச்சி கட்டுக்கடங்காமல் கொதித்தெழுந்தது. அந்த அநீதியின் மீதும் அதை நியாயப்படுத்தத் துணிந்தவர்கள் மீதும் சீற்றம் ஏற்பட்டது. இருப்பினும், எனது மனம், ஏன் கொந்தளிக்கின்றது என்பது புரியாமலே இருந்தது.

மற்றவர்களின் துயர் கண்டு துன்பப்படுவது இயல்பு என்ற போதிலும், குற்றம் புரிந்தவர்களைக் கண்டு குமுறுவதும் இயல்புதான் என்ற போதிலும், எனது உணர்வுகள் கவலையளிக்கும் வகையில் கட்டுக்கடங்காது இருந்தன. இச்சம்பவத்துடன் நேரடித் தொடர்பில்லாத எனக்கு, ஏன் இத்தகைய அதீத பதட்டம்? பாடசாலையில் எனக்கு ஏற்பட்ட வேதனைமிக்க அனுபவங்களைத்தான் மீண்டும் உணர்கின்றேன் என்பது, சில நாள்களின் பின்னர்தான் புரிந்தது.

2019ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் உயர்தரத்துடன் முடிவடைந்த எனது பாடசாலை வாழ்க்கை, அதற்கேயுரிய தருணங்களைக் கொண்டிருந்தது. ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சரீர தண்டனை அளிக்கலாமென்று அனுமதிக்கின்ற ஒரு பாடசாலைதான் அந்தப் பாடசாலை. முரட்டுத்தனமான பிரம்படி மட்டுமல்லாமல் கன்னத்தில் அறைதல், ஓங்கிக் குத்துதல் என்பவை எல்லாம் எனது பாடசாலை நாள்களில் சர்வசாதாரணமானவை. மாணவத்தலைவர்களுக்கும் இந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதால் அவர்களில் சிலரும் இதைப் பிரயோகித்தனர்.

சரீர தண்டனை பற்றிய, முதலாவது தனிப்பட்ட அனுபவம், எட்டாம் தரத்தில் பாடசாலையில் சேர்ந்த மூன்று மாதங்களுக்குள் எனக்கேற்பட்டது. இச்சம்பவத்துக்கு முன்னர், இரண்டு நாள்கள் பூராவும் நடத்தப்பட்ட ஓர் இசைப்பட்டறையில், பாடசாலையின் சார்பாகப் பங்குபற்றியிருந்தேன். அவ்விரு நாள்களும் நான் பாடசாலைக்குச் செல்லாததால், கொடுக்கப்பட்டிருந்த வீட்டுவேலை பற்றி அறிந்திருக்கவில்லை.

மறுநாள் காலை, முந்திய நாளின் வீட்டுவேலையைச் செய்திராதவர்களை எழுந்துநிற்கும்படி ஆசிரியர் சொன்னார். பட்டறைகளில் பங்குபற்றியதால் வீட்டுவேலை பற்றி அறிந்திருக்கவில்லையென்றும், அதனால் அதைச் செய்ய முடியாமல் போய்விட்டதென்றும் விளக்கிச் சொல்லும் எண்ணத்துடன் எழுந்துநின்றேன். ஆனால், 'பளார்' என்று கன்னத்தில் விழுந்த அறையைத் தடுப்பதற்குக்கூட, நேரம் கிடைக்கவில்லை. நான் ஏன் வீட்டுவேலைச் செய்யவில்லை, அதற்கு ஏதும் காரணம் இருக்கின்றதா என்று ஒரு கேள்வி கூட இல்லை.

பாடசாலையில் சேர்ந்த நாள் தொட்டு, பெற்றோரும் நானும் சரீர தண்டனையை எதிர்த்துநின்ற போதிலும் அக்கணத்திலிருந்து பாடசாலையில் இவ்வழக்கம் தொடர்வதற்கு இடமளிக்கக் கூடாதென்று தெரிந்துகொண்டோம். இருந்தபோதிலும், பாடசாலை வாழ்க்கைக் காலம் முடியும் வரை, போராட வேண்டியிருந்த ஒரு போர்க்களமாகத்தான், இந்த முயற்சி இருந்தது.

தொடர்ந்து பலதடவைகள், உடல்ரீதியாகத் துன்புறுத்தப்பட்டேன். ஒரு பிள்ளை தவறு செய்திருந்தாலும்கூட, சரீர தண்டனையை ஒருபோதும் விதிக்கக்கூடாதென்ற அதேவேளையில், அச்சம்பவங்களில் ஒன்றில் தன்னும், தவறெதையும் நான் செய்திருக்கவில்லை என்பதுதான், சரீர தண்டனையை மேலும் வெறுக்கத்தக்கனவாக்கின.

அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆசிரியர், எனது விளக்கத்தைக் கேட்க மறுப்பதுடன், சில சமயங்களில் விளக்கத்தைக் கூறுவதற்கான வாய்ப்பைக்கூட வழங்குவதில்லை. அதேவேளையில், சரீர தண்டனைக்கு எதிரான எனது நிலைப்பாட்டின் நிமித்தம், சில ஆசிரியர்களிடமும் மாணவத் தலைவர்களிடமும் மாணவர்களிடமும் இருந்து, இடைவிடாது எனக்குக் கிடைத்த ஏளனப் பேச்சுள்தான் எல்லாவற்றையும் விட மோசமானவை.

சில ஆசிரியர்கள் மறைவாக அவதூறு பேசுவார்கள்; சில மாணவர்கள் வேண்டுமென்றே என்னைத் தூண்டிவிடப் பார்ப்பார்கள். ஒவ்வொரு சிரேஷ்ட மாணவத் தலைவர்களின் தொகுதியிலும் இருந்த பெரும்பாலானவர்கள் சாத்தியமான எல்லா வகையிலும் என்னைத் துன்புறுத்துவதில் உறுதியாயிருந்தனர். அடிக்கடி பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அநாவசியமாக விசாரிக்கப்பட்டேன். நான் குற்றவாளியென்று எண்ணிக்கொள்ள, அவர்கள் விரும்பியதுதான் அதற்குக் காரணம்.

இருப்பினும், பெற்றோரின் அளப்பரிய ஆதரவாலும் ஆழ்ந்த நம்பிக்கையாலும் ஒருசில ஆசிரியர்களினதும் நண்பர்களினதும் புரிந்துணர்வாலும், நான் நானாக இருக்கக்கூடுமாயிருந்தது. பிள்ளைகளைத் தாக்குவது கொடுமையானதென்று நம்புகின்ற ஒரு விசித்திரப் பிறவியாக என்னைக் கருதிய போதிலும், இறுதியில் அதிபர் உட்படப் பெரும்பாலான ஆசிரியர்கள், என்னை நம்பலாமென்று புரிந்துகொண்டனர். இதன் காரணமாகவும், பெற்றோரின் இடைவிடாத முயற்சியின் நிமித்தமும் சரீர தண்டனையிலிருந்து நான் விடுபட்ட போதிலும், வேறு வடிவங்களில் துன்புறுத்தல் தொடர்ந்தது.

எவ்வாறாயினும், எனது போராட்டங்கள் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. ஏனெனில் நான் அறிந்த மட்டில், எனது பாடசாலையில் இப்போதும் சரீர தண்டனை இடம்பெறுகின்றது. பிள்ளைகளின் மனதிலும் சமூகத்திலும் தீவிரமாகப் பரப்பப்படுகின்ற ஒழுக்கக்கேடான செய்தி இன்றும் அதேதான்; வன்முறை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது என்பதாகும்.

வேறெதையும் விட, மாணவத் தலைவர்களின் நடத்தையில்தான் ஒழுக்கக்கேடான இச்செய்தியின் ஆபத்து, கூடுதலாக உணரப்படுகின்றது. ஓர் ஆசிரியர் பாடத்தை எடுக்கத் தவறுகின்றபோது, வகுப்பில் கதைத்தார்கள் என்பதற்காக, மாணவர்களுக்கு அடிபோடுகின்ற மாணவ தலைவர்கள் இருந்தார்கள். ஆசிரியர்களுக்குச் சொந்த நேர அட்டவணைகள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், வகுப்புக்கு வருவதைப்பற்றிக் கவலைப்படாமல், மாணவர்கள் தமக்கு நினைவூட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கின்ற ஆசிரியர் பற்றிய பிரச்சினை பெரிதாகக் கண்டுகொள்ளப்படுவதில்லை. எனினும், ஆசிரியர் இல்லாத ஒரு வகுப்பறையில், மாணவர்கள் கதைப்பது பாரதுரமான குற்றமாகக் கருதப்படுகின்றது. அதற்கு அடிபோடலாம் என்பதுதான் கேவலமானது.

மூத்த மாணவ தலைவர்கள் சிலர், இளைய மாணவத் தலைவர்களைக் அடிக்கின்றனர். உயர்தர மாணவர்களாயிருக்கும் மாணவத் தலைவர்களால், சிறு பிள்ளைகள், காரணம் எதுவுமின்றித் துன்புறுத்தப்படுகிறார்கள். சில ஆசிரியர்களும் மாணவத் தலைவர்களும் தமக்கு இடைஞ்சலாய் இருந்தார்களென்ற ஒரே காரணத்துக்காக, மாணவர்களைக் கன்னத்தில் அறைந்தும் ஓங்கிக் குத்தியும் இருக்கிறார்கள்.

எமது நாட்டில் வன்முறை, பாடசாலையுடன் முடிந்துவிடுவதில்லை. இலங்கையிலுள்ள உயர்க் கல்வி நிறுவனங்களில், படுமோசமான அவலங்களில் ஒன்றுதான் 'பகடிவதை' என்கின்ற வக்கிரத்தன்மை கொண்ட விபரீதமான சடங்கு. வளாகச் சித்திரவதை என்று பொருத்தமாகக் கூறப்படுகின்ற இப்பகடிவதையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு நாடாக, இலங்கைதான் கருதப்படுகின்றது.

உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பல்வேறு வடிவங்களில் புரியப்படும் இவ்வன்முறை, மாணவர்கள் பலரின் உயிரைப் பறித்துள்ளதுடன் அனேகரின் மனநலனையும் பாதித்துள்ளது. அவர்களும் அவர்களின் குடும்பங்களும் எந்தப் படிப்புக்காகத் தமது குருதியையும் வியர்வையையும் கண்ணீரையும் சிந்தினார்களோ அந்தப் படிப்பைப் பெருந்தொகையான மாணவர்கள் கைவிட்டுச் செல்வதற்கு பகடிவதை காரணமாக அமைந்துள்ளது.

இத்தகைய கடுங்கொடிய குற்றங்களைப் புரிந்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளலாமென்ற துடுக்கான இம்மனப்பாங்கு, பாடசாலையில் அவர்கள் ஈட்டிய அனுபவத்திலிருந்து எழுகின்றது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் முதன்மையான செய்தி, வன்முறை ஏற்றுக்கொள்ளத்தக்கது. அதற்கெதிராகப் பேசுதல் இயல்பற்றதும் முன்யோசனையற்றதுமாகும் என்பதாகும். உங்களுக்கு அதிகாரம் இருப்பின், நீங்கள் விரும்பியவாறு பயன்படுத்தலாம் என்பது பாடசாலைகளிலிருந்து அவர்கள் ஈட்டுகின்ற அனுபவமாகும். இதுதான் மனச்சோர்வையும் விரக்தியையும் அளிக்கின்ற எதார்த்தம்.

பல்கலைக்கழகங்கள் கேள்விக்கிடமின்றி இத்தகைய குற்றங்களுக்கெதிராகச் செயற்படவேண்டிய அதேவேளையில், பாடசாலைகள்தான், எமது தேசத்துக்குக் கண்ணியமான பிரஜைகளாக மாணவர்கள் தக்கமுறையில் ஆயத்தப்படுத்தப்படுதலை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களை வன்முறையற்ற முறையில் ஒழுக்கப்படுத்துதல், குறிப்பாக, ஆசிரியர்களுக்கும் மாணவ தலைவர்களுக்கும், அதிகாரத்துடன் வருகின்ற 'பொறுப்பை' ஏற்றுக்கொள்ளக் கற்பித்தல் என்பவைதான் பாடசாலையொன்று சரியான பாதையில் செல்லத்தொடங்குவதற்கான அடிப்படை வழிகள் ஆகும்.

மேலும், பெற்றோர் இத்தகைய பிரச்சினைகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பதுடன், பாடசாலைகளில் தமது பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்பதை ஏற்றுக்கொண்டவர்களாகவும் உணர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டியதுடன் ஐயத்துக்கிடமின்றி அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களை ஊக்குவிக்கவும் அவர்களுக்காக வாதாடவும் வேண்டும்.

பாடசாலையில் நான் அனுபவித்தவை, நாடுபூராவும் பெரும்பாலான பாடசாலைகளில் இடம்பெறுகின்றன. இன்றைய உலகளாவிய நிகழ்வுகளைப் பார்க்கையில், இத்தகைய அவலநிகழ்ச்சிகள், நிகழ்வதைத் தடுக்கவேண்டுமாயின் சொந்தச் சமூகங்களுக்குள் காணப்படும் குறைபாடுகளை ஒப்புக்கொள்ளவேண்டும்.

எமது நாட்டில், மாணவர்கள் மீது, பாடசாலைகள் திணிக்கின்ற தீங்குகளிலிருந்து தப்பிக்க வழிதெரியாத மாணவர்கள் நிரம்பவுள்ளனர். நான், பெற்றோரின் தொடர்ச்சியான ஆதரவாலும் தடுமாற்றமில்லாத நம்பிக்கையாலும் மட்டும்தான் அவற்றைத் தாங்கிக்கொண்டேன். எனினும் அநேக பெற்றோர், இத்தகைய ஆதரவை வழங்குவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். துன்புறுத்தலை அறிவிப்பதற்கு விரும்பிய போதிலும், கொடுமைப்படுத்தக்கூடுமென்ற அச்சத்தால், அவர்கள் குறிவைக்கப்படுவதைப் பெற்றோர் விரும்பாத காரணத்தால் அதனை மாணவர்கள் தவிர்த்துக்கொள்கிறார்கள். இத்தகைய தர்க்க நியாயத்துக்கு உடன்படாத போதிலும், நான் அனுபவிக்க நேர்ந்தவற்றின் பின்னணியில் அவர்களின் அச்சங்கள் அடிப்படையற்றவை என்று கூறுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. எனினும், செயற்படாதிருப்பதற்கு அதுவொரு காரணமல்ல.

அளவுக்கதிகமானோர் கண்டும் காணாதது போல் விட்டுவிட விரும்புகின்ற துன்பம்மிக்க ஓர் உண்மை, எமக்குச் சொந்தமான 'அழகிய' இத்தீவில், எமது கண்முன்னால் புழுத்துப் போயிருக்கின்றது.

மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு கலவரமோ ஆர்ப்பாட்டமோ தேவையில்லை. எம்மில் எவரும் செய்யக்கூடிய முதலாவது காரியம் இந்த அவலமான எதார்த்தங்கள் உள்ளமையை ஏற்றுக்கொள்ளுதலும் அவை ஐயத்துக்கிடமின்றி தார்மிகத்துக்குப் புறம்பானவையென்று ஒப்புக்கொள்ளுதலும்தான். எமது சொந்தக்குறைபாடுகளை ஏற்றுக்கொள்ளாமல் அவற்றைத் திருத்தமுடியுமென்று எண்ணிக்கூடப் பார்க்க முடியாது.

நாம் செய்யவேண்டிய மற்றொரு செயல், இவ்விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்தலாகும். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வி நிறுவனங்களில் அனுபவிக்கின்ற உளரீதியானதும் உடல்சார்ந்ததுமான துஸ்பிரயோகங்கள் பற்றித் தமக்குக் கூறவேண்டுமென்று பெற்றோர், பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டியது முக்கியமானது. இந்நிறுவனங்களும் இதே சுதந்திரத்தை மாணவர்களுக்கு வழங்கவேண்டும். மாணவர்கள் அவர்களின் இளமைக்காலம் பூராவும் அச்சத்துடன் வாழவேண்டுமென்பதில்லை.

சரீர தண்டனையை நிறுத்தினால் ஒழுக்கப்பாடும் அற்றுப்போய்விடும் என்ற ஒரு பொதுவான தப்பெண்ணம் எமது சமுதாயத்தில் உள்ளது. இது முழுமையாக உண்மைக்குப் புறம்பானது. மாணவர் நடத்தையை முன்னேற்றுவதற்குப் பல்வேறு நாடுகளில் வெற்றிகண்ட எண்ணற்ற வன்முறையற்ற முறைகள் இருப்பதோடல்லாமல், மாணவர்களை ஒழுக்கப்படுத்துவதற்கு சரீர தண்டனை ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு முறையுமல்ல.

அது கொடுமையானது; நீண்ட காலத்தீங்கை ஏற்படுத்துவது என்பதோடு அது ஒருபோதும் வெற்றியளித்ததுமில்லை. ஆறாண்டு காலம், நான் நேரடியாக அவதானித்தவற்றின் அடிப்படையில், எனது பாடசாலையில் சரீர தண்டனை மாணவர் நடத்தையை முன்னேற்றுவதில் கடுகளவு மாற்றத்தையேனும் ஏற்படுத்தவில்லையென்று உறுதியாகக் கூறமுடியும்.

உண்மையில் அது முற்றிலும் எதிர்மாறான விளைவை ஏற்படுத்தியிருந்தது. ஆயின், சரீர தண்டனையின் பயன்விளைவு எவ்வாறிருப்பினும் அது தார்மிகத்துக்கு புறம்பானது என்பதால் எந்த நிலைமையிலும் அதனைப் பயன்படுத்தக்கூடாது.

பிள்ளைகளை ஒழுக்கப்படுத்துவதற்கான மாற்று முறைகளில் தடுத்துவைத்தல்கள், பல்வேறு சங்கங்களில் மாணவரின் பதவியை நீக்குதல், பிள்ளையின் நடத்தை பற்றிப் பெற்றோருக்கு அறிவித்தல், இடைநிறுத்துதல் எல்லாம் தோல்விகாணுமிடத்து, பாடசாலையிலிருந்து விலக்குதல் என்பவை அடங்கும். தடுத்துவைத்திருக்கக்கூடிய காலநீட்சி பிள்ளையின் நடத்தையின் கடுமையை ஒத்திருக்க வேண்டிய அதேவேளையில், முன்னைய முறைகள் எல்லாவற்றையும் கைக்கொண்ட பின்னரும் பிள்ளையின் நடத்தையில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் இறுதியான ஒரு வழிமுறையாக விலக்கல் கருத்தில் கொள்ளப்படலாம். எவ்வாறாயினும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலான மதிப்பு, பரஸ்பரம் இரு தரப்பிலும் இருத்தலை உறுதிப்படுத்துவதற்கு வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்.

மிக முக்கியமானதாக, பிள்ளைகள் தவறு செய்கின்றபோது ஆசிரியர்கள் அவர்களுக்கு அடிக்காமல், திட்டித்தீர்க்காமல் அவர்களுடன் கதைக்க வேண்டும். இது இன்றியமையாதது. குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் உண்மையில் குற்றம் புரிந்தவரா? அவ்வாறாயின், அம் மாணவர் ஏன் எதிர்பார்த்தபடி நடக்கத் தவறினார் என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்த வேண்டும். அதன்பின்னர், அச்செயல் ஏன் தவறானதென்று பிள்ளை புரிந்துகொள்ளக்கூடியதாக அதற்கு விளக்கிக்கூறவேண்டும். இதனை வழமையாகச் செய்கின்றவாறு அர்த்தமின்றிக் கூச்சல் போடாமல், வன்முறையைப் பிரயோகிக்காமல் செய்யவேண்டும்.

ஆக்கபூர்வமான வலிமைப்படுத்தலும் பெருமளவு முக்கியமானது. பிள்ளைகள் நல்லமுறையில் செயலாற்றினால் அவர்களைப் பாராட்ட வேண்டும். இது பிள்ளையின் சுய மதிப்பை மேம்படுத்துவதுடன் மற்றவர்களையும் நன்கு செயற்படுவதற்கு ஊக்குவிக்கும். ஒரு கேள்விக்குப் பிள்ளை சரியாகப் பதில் சொல்லத்தவறினால் அதனைப் பகிரங்கமாக அவமானப்படுத்தக் கூடாது. இவ்வகையில் மாணவர்களை மானமிழக்கச் செய்வது பெருமளவில பொதுவாகக் காணப்படுகின்றது. ஏனெனில், அநேக ஆசிரியர்கள் வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் சிரிக்க வேண்டுமென்பதற்காக இதனைச் செய்கின்றனர். மாணவரின் சுயமதிப்பைக் குறைப்பதற்கும் வன்மம் ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கின்ற இது அப்பட்டமான ஓர் அவமானப்படுத்தலாகும்.

இதற்குப்பதிலாக ஓர் ஆசிரியர், மாணவர் செய்த தவறை மீண்டும் செய்யாதிருக்கக் கூடியதாக அவர் விளங்கிக்கொள்ளும் வகையில் அம்மாணவரைத் திருத்தவேண்டும். ஆசிரியர்கள் கடுகடுப்பான சொற்களை அல்லது வன்முறையை நாடாமல் மாணவர்களுக்குத் தாம் பொறுப்பாய் இருக்கின்றோமென்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். ஆசிரியர்கள் செயல்முறை அறிவுறுத்தல்களை வழங்குகின்ற போது மாணவர்கள், ஒருபோதும் அவமதிக்கப்படவோ அடிவாங்கவோ வேண்டிய தேவையின்றி, அவற்றுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று அறிந்திருக்க வேண்டும்.

பாடசாலைகள் சரீர தண்டனையைத் தடைசெய்வதில் வெற்றிகண்டுள்ள ஏனைய உள்நாட்டு, சர்வதேசப் பாடசாலைகளிலிருந்தும் ஆலோசனையைப் பெறவேண்டும். பிள்ளைகளை எவ்வாறு சரியான முறையில் கட்டுப்படுத்தலாமென்ற ஒரு புரிந்துணர்வை இது கொடுக்கும்.

வன்முறையை, ஏசித்திட்டுதலை நாடாத ஆசிரியர்கள் ஏனையோரை விடக் கூடுதலாக மதிக்கப்படுகிறார்கள். இதற்குச் சான்றாக, மாணவர்கள் அவ்வாசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் பொருட்டு, வகுப்பில் கூடுதலாகக் கதைக்கின்றவர்களை மற்ற மாணவர்கள் கட்டுப்படுத்துவார்கள். அத்தகைய ஒரு சில ஆசிரியர்கள், உண்மையில் மாணவர்களை மதித்து நடத்துவதுடன் அவர்களின் தவறுகளை ஏன் திரும்பவும் செய்யக்கூடாதென்பதைப் புரிந்துகொள்ளவும் செய்வர். எமது கல்வி நிறுவனங்களில் இன்னமும் நம்பிக்கை வைக்க முடியுமென்பதற்கு இது சான்று.

எனவே, எமது நாட்டின் குடிமக்களாக, இப்பிரச்சினைகள் பற்றித் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கின்றது. காலம் கடக்கு முன்னர், அவற்றை நாம் ஏற்றுக்கொள்வோம்; விழிப்புணர்வைத் தொடக்கிவைப்போம்; ஒழுக்கத்துக்காக உறுதியான நிலைப்பாட்டை எடுப்போம்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 28 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.